www.padippakam.com


# புதிய சமதர்மம்

புதிய சமதர்மம் (சிங்களம்)


PUTHIYA SAMADHARMAM

இதழ் : 33 நவ / டிசம்பர் 2000 விலை : ரூபா 10.00


## உண்மையின் விலை மரணமா?



கபடத் தலைவர்களின் நயவஞ்சகச் சிரிப்பால் நாட்டுக்கு விளைவது பெரு நாசமே...



# பிடரி இறுகிய நிலையில் சந்திரிகா





மிழ் தேசிய இனப்பிரச்சினை உச்சக்கட்ட லைக்குச் சென்றுள்ளது. யுத்தத்தின் மூலம் சமாதானம் காணலாம் என்ற ந்திரிக்காவின் கனவு நிறைவேறாத லைக்குச் சென்றுள்ளது. சர்வதேச மூகத்தின் தொடர்ச்சியான அழுத்தம், மிழ் ஈழ விடுதலைப் புலிகளின் ஓயாத ாக்குதல், தற்போது மலையகத்தில் ற்பட்டுள்ள எழுச்சி. இவற்றால் சந்திரிகா ரசு நிலை குலைந்து போய் உள்ளது. ரணம் தப்பினால் மரணம் என்ற லையிலேயே பொதுஜன முன்னணியின் ஆட்சியின் ஆயுட் காலம் ஊசலாடிக் காண்டிருக்கிறது.

ந்த அபாயத்தில் இருந்து தன்னைக் ாப்பாற்றிக் கொள்ள சந்திரிகா பல டவடிக்கைகளை எடுத்து வருகிறார். டந்த பொதுத் தேர்தலுக்கு இனவாதத்தைக் கக்குமாறு கிரீடம் சூட்டி னுப்பப்பட்ட பிரதமர் இரத்தினசிறி க்கிரமநாயக்கா தற்போது ஓரம் ட்டப்பட்டு உள்ளார். நோர்வே பிரதிநிதி சால்கெய்ம் யாருக்கும் தெரியாமல் டனடியாக வன்னிக்கு அனுப்பப்பட்டார். சொல்கெய்ம் வன்னிக்கு னுப்பப்பட்டது மந்திரி சபைக்குக் கூடத் தரியாது. இதேநேரம் சந்திரிகா மற்கொண்ட சகல நடவடிக்கைகளும் ணில் விக்கிரமசிங்காவுக்கு உடனுக்குடன் அறிவிக்கப்பட்டது. சர்வதேச

நாடுகளிடம் இருந்து ஒரு சதம் கூடப் பெற முடியாத நிலையில் தான் சந்திரிகா சமாதான முயற்சியில் இறங்கியுள்ளார். எனவே தமிழ் மக்களுக்குரிய தீர்வும் சர்வதேச நிறுவனங்களைத் திருப்தி பண்ணும் விதத்திலேயே அமையும். தமிழ் மக்களின் எதிர்பார்ப்புகளை விட சர்வதேச நிறுவனங்களை சமாதானப்படுத்துவதிலேயே சந்திரிகா அதிக கரிசனை காட்டுகிறார். சர்வதேச முதலாளித்துவமும், சந்திரிகாவும் அவசரப்படுவது தமிழ் மக்கள் மீது உள்ள பாசத்தினால் அல்ல. எனவே தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் அவர்களின் நயவஞ்சக வலைக்குள் விழுவார்களா என்பது சந்தேகமே?

தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் தென் இலங்கை முற்போக்கு சக்திகளுடன் தமது உறவுகளை வலுப்படுத்தி, தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தை வெற்றி கொள்ள முயல்வதே, சரியானதாக அமையும் என்பது எமது கருத்து.



ரணில் சந்திரிகாவின் உறவு கபடத்தனம் உடையதாகும். இதில் தமிழ் மக்கள் நம்பிக்கை வைக்கக்கூடாது.

இன்றுள்ள சூழ்நிலையில் ஜனதா விமுக்தி பெரமுனை (ஜே.வி.பி) பச்சோந்திகள் போன்றே செயற்படுகிறது. தேர்தல் காலத்திற்கு முன்பு சிங்கள உறுமையா அமைப்புடன் கைகோர்த்து செயற்பட்டது. தற்போது பிந்துனுவெவ சம்பவத்தில் இனவாதிகளைக் கண்டிக்கிறது. விகிதாசார பிரதிநிதித்துவத்தை சந்திரிகா தொடர்ந்து நடைமுறைப்படுத்துவாராயின், இவர்கள் சந்திரிக்காவையும் ஆதரிப்பார்கள். அதேபோல் தமிழ் ஈழ விடுதலைப் புலிகளால் தமக்கு இலாபம் ஏற்படுமானால், இவர்கள் நாளை தமிழ் ஈழ விடுதலைப் புலிகளையும் ஆதரிப்பார்கள்.

## உள்ளே.....




வேசம் கலைந்த ஜனதா விமுக்தி பெரமுன





கடலில் மூழ்கிய ரஷ்ய நீர்மூழ்கிக் கப்பலில்





கல்யாணத்துக்குத் தாலியா... நான்சென்ஸ்!


படிப்பகம்

www.padippakam.com



# வேகமாக அதிகரிக்கும் மாணவர் கொலைகள்

இந்த நாடு வன்முறைகள் மலிந்த பூமியாக மாறி வருகின்றது. சிறுவர், முதியோர், பெண்கள் போன்ற பிரிவினர்கள் மீது பல்வேறு வகைகளில் வன்முறைகள் புரியப்படுகின்றன. அண்மைக் காலமாக மாணவர்கள் மீதான வன்முறைகள் அதிகரித்துக் காணப்படுகிறது. வடக்கு, கிழக்குப் பகுதிகளில் யுத்தமே மாணவ சமுதாயத்திற்கு இயமனாக மாறியுள்ளது. தென் இலங்கையில், சமூக பொருளாதார காரணிகள், மாணவர்களை கசக்கிப் பிழிகின்றது.

அண்மையில் வைத்தீஸ்வராக் கல்லூரி மாணவன் கழுத்தில் சுருக்கிட்ட நிலையில் மரணமடைந்துள்ளார். இப்பாதகச் செயலைப் புரிந்தவர்கள் யார் என்று தெளிவாகவில்லை. ஆனால் அண்மையில் இராணுவத்தால் சுட்டுக் கொல்லப்பட்ட இந்துக் கல்லூரி மாணவன் சோமசுந்தரம் சஞ்சீவனின் நெருங்கிய நண்பனாக ஜெயராஜ் இருந்துள்ளார்.

வவுனியா தோணிக்கல் ஆலயத்தில், தோணிக்கல் சிவன் வீதியைச் சேர்ந்த சண்முகநாதன் மகாதேவன் என்ற மாணவன் கழுத்தில் சுருக்கிட்ட நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். இம் மாணவன் தனது சகோதரனுடன், உறங்கிக் கொண்டிருந்த வேளையில், இப்பரிதாப முடிவுக்கு இலக்காக்கி உள்ளனர்.

கடந்த 18.08.2000ம் தேதி அன்று மட்டக்களப்பு களுவன்கேணியில் மாணிக்கவேல் விஜயவர்சன் என்ற மாணவன் இராணுவத்தால் சுட்டுக் கொல்லப்பட்டதாகத் தெரிய வருகிறது. இவரின் கொலைக்கு இராணுவமே பொறுப்பு என்று இறந்தவரின் தாயார் தெரிவித்துள்ளார்.

போரின் உக்கிரத்தால், வடக்கு, கிழக்கு மாணவ சமுதாயத்தின் மீது புரியப்படும் ஏனைய வன்முறைகள் யாவும், வெளியே வராது அமுங்கிப் போய் கிடக்கிறது.

இதேவேளை தென் இலங்கையில் சமூக பொருளாதார காரணிகளால் மாணவ சமுதாயம் பல்வேறுபட்ட கொடுமைகளுக்கு உள்ளாகி வருகின்றது. கொலன்னாவைப் பகுதியில் சபுன் குமார என்ற 12 வயது மாணவனை ஈவிரக்கமற்ற கொலைகாரன் ஒருவன் கொலை செய்து விட்டு, உடலை சேற்றுக்குள் புதைத்துள்ளான். இறந்த மாணவனின் தாயாருக்கும் கொலைகாரனுக்கும் ஏற்பட்ட வாய் தர்க்கத்திற்கு பழிவாங்கும் நோக்குடன் இக் கொலை நடந்துள்ளது.

கடவத்தைப் பகுதியில் அனாதை இல்லம் ஒன்றில் படித்து வந்த அனுசியா என்ற மாணவியை காப்பகத்தில் உள்ளோர் பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கியுள்ளனர். இம்மாணவிக்கு ஏற்பட்ட நோய்களுக்கு காப்பக நிர்வாகிகள் உரிய சிகிச்சையை வழங்கவில்லை. இதனால் மாணவி இராகம வைத்தியசாலையில் பரிதாபகரமாக உயிர் துறந்துள்ளார்.

பண்டாரகம பகுதியில் வறுமை தாங்க முடியாத இளம் தாய் தனது இரண்டு குழந்தைகளையும் வெட்டிக் கொன்று விட்டு. தானும் தற்கொலை செய்துள்ளார்.

பியகம பகுதியில் உள்ள பாடசாலை ஒன்றில் ஆண்டு 11 படிக்கும் மாணவர்களிடையே ஏற்பட்ட கைகலப்பால் ஒரு மாணவன் 4 விரல்களை இழந்துள்ளான். தற்போது 27 மாணவர்கள் தடுப்புக் காவலில் உள்ளனர்.

அக்கிரியகல்ல கொஸ்கின்ன என்ற இடத்தில் 11 வயது நிரம்பிய மாணவனான விஜித்த பண்டார சுதந்திரமாக பட்டம் பறக்க விட்டுக் கொண்டிருக்கும் போது கொலை செய்யப்பட்டு உள்ளான்.

இதேபோல் வேறு ஒரு பகுதியில் 11 வயது மாணவனை பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கிய 24 வயது நிரம்பிய காமுகன் ஒருவன், பின்பு அம்மாணவனைக் கொலையும் செய்துள்ளான்.

மின்னேரியா பகுதியில் நிறைபோதையில் வந்த தந்தையால் சரிதா பத்மினி என்ற மாணவி பரிதாபமாக கொலை செய்யப்பட்டுள்ளார். தந்தையார் தாயாரைக் கத்தரிக்கோலால் தாக்கும் போது இடையே புகுந்ததால் இம் மாணவிக்கு இந்நிலை ஏற்பட்டுள்ளது.

இன்று இந்த நாட்டிலே, வறுமை, பாலியல், வாய் தர்க்கம், போதை போன்ற பல்வேறு காரணிகளால் மாணவ சமுதாயத்திற்கு மரணம் ஏற்படுகின்றது. கடந்த ஆகஸ்ட் மாதத்தில் மட்டுமே இத்தகைய துயர நிகழ்வுகள் ஏற்பட்டுள்ளன.

இலங்கைப் பொருளாதாரத்தை மறுசீரமைக்கிறோம் எனக் கூறிக் கொண்டவர்களால் ஏற்படுத்தப்பட்ட நாசமே, இன்று மக்கள் படும் துயரத்துக்குக் காரணமாகி உள்ளது. மனித கூட்டத்தில் பெரும்பகுதியினர் மனித தூசுக்களாக மாற்றப்பட்டுள்ளனர். இதனால் கொலைகள் மிக மலிவாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. சமூகத்தின் ஏற்றத்தாழ்வு மிகப்பெரிய இடைவெளியாகி உள்ளது. கீழ் மட்டத்தில் உள்ளவர்களுக்கு இருந்த சமூக பாதுகாப்புக்கான அனைத்தும் துடைத்தெறியப்பட்டுள்ளன. இதனால் பல்வேறுபட்ட சமூகக் கொடுமைகளுக்கு மனித சமுதாயம் முகம் கொடுத்து வருகிறது.

# மந்துகம டெல்சித் தோட்ட இனக்கலவரம் வெளிப்படுத்தும் உண்மைகள்

டெல்சித் தோட்டப் பகுதியில் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த ரஞ்சித் என்பவர் கடை ஒன்றை நடத்தி வந்துள்ளார். இவரது கடையில் பொருட்களை வாங்காது விட்டால் அவர்களுக்குத் தொல்லை கொடுப்பதே ரஞ்சித்தின் வழக்கமாக இருந்துள்ளது. ஆளும் பொதுஜன முன்னணியின், ஆதரவாளரான ரஞ்சித் வைத்ததே சட்டமாக இருந்தது. இவரது கொடுமைகளுக்கு அஞ்சி இப்பகுதி தோட்டத் தொழிலாளர்கள் அடங்கி நடந்து வந்துள்ளனர்.

கடந்த பாராளுமன்றத் தேர்தலின் போது பொதுஜன முன்னணி ஊர்வலத்துக்கு வருமாறு டெல்சித். தோட்ட மக்களை ரஞ்சித் குழுவினர் அச்சுறுத்தி வேண்டுகோள் விடுத்துள்ளனர். இம்முறை மக்கள் ரஞ்சித்தின் அச்சுறுத்தலுக்கு இடம் கொடுக்கவில்லை. மக்கள் பொதுஜன முன்னணியின் ஊர்வலத்துக்குச் செல்லவில்லை. டெல்சித் தோட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதேச சபை உறுப்பினர் பத்மநாதன் என்கின்ற ஒருவரும் உள்ளார். பத்மநாதன் தான், டெல்சித் தோட்ட மக்கள் ஊர்வலத்தில், கலந்து கொள்ளாமல் தடுத்துள்ளார் என ரஞ்சித் குழுவினர் பிரசாரம் செய்துள்ளனர். ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதேச சபை உறுப்பினர் ஒரு புலி ஆதரவாளர் என்ற புரளியையும் இப்பகுதியில் ரஞ்சித் குழுவினர் கிளப்பி விட்டுள்ளனர்.

இறுதியில் இத்தகைய சம்பவங்கள் விஸ்வரூபம் எடுத்து, கைகலப்பில் முடிந்துள்ளது. இச் சம்பவத்தில் ரஞ்சித் கொல்லப்பட்டுள்ளார். இதனால் ஆத்திரம் அடைந்த பெரும்பான்மை இனத்தவர் தோட்டத் தொழிலாளரின் 20க்கும் மேற்பட்ட குடியிருப்புகளை தீ வைத்துக் கொழுத்தியதுடன், தோட்டத் தொழிலாளி ஒருவரைத் தாக்கிக் கொன்றுள்ளனர்.

தோட்டத் தொழிலாளர்கள் மீது இத்தகைய கொடிய இன வன்முறை நடந்து கொண்டிருந்த போது, பொலிசார் உடனடியாகப் பாதுகாப்பு வழங்கவில்லை. இம் மக்கள் தமது குடியிருப்புக்களை விட்டு நாலா திசையும் ஓடியுள்ளனர். இன்று அகதிகளாக தமது குடியிருப்புக்களுக்கு திரும்பவும் போவதற்கு அச்சமுற்ற நிலையில் உள்ளனர். பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த ரஞ்சித் கொல்லப்பட்டமைக்காக 39 தோட்டத் தொழிலாளரை பொலிசார் கைது செய்து தடுப்புக் காவலில் வைத்துள்ளனர். இவர்களில் 2 பெண்களும் அடங்குவர். ஆனால் தோட்ட மக்கள் மீது புரியப்பட்ட கொடுமைகளுக்காக ஒருவர் மட்டுமே கைது செய்யப்பட்டுள்ளார்.

20க்கும் மேற்பட்ட குடியிருப்புக்கள் கொழுத்தப்பட்டதற்கு, பொருட்கள் கொள்ளையடிக்கப்பட்டதற்கு, ஒரு தொழிலாளி கொலை செய்யப்பட்டமைக்கு ஒருவர் மட்டுமே கைது செய்யப்பட்டுள்ளார். ஆனால், பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த ரஞ்சித் கொலை செய்யப்பட்டமைக்கு 30 தோட்டத் தொழிலாளர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இனவாதம் எத்தனை மடங்கு வேகத்தில் வேலை செய்கிறது என்பதை எம்மால் புரிந்து கொள்ள முடிகிறது.

பொதுஜன முன்னணிக்கும், ஐக்கிய தேசியக் கட்சிக்கும் முண்டியடித்து ஆதரவு கொடுக்க நினைக்கும், மலையகத் தலைவர்கள் இவ்விடயம் தொடர்பாக என்ன நடவடிக்கை எடுக்கப் போகின்றார்கள். இதற்கும் 5 நட்சத்திர ஹோட்டல்களில் பேச்சு வார்த்தை செய்யப் போகின்றார்களா?

# தற்காப்பு யுத்தம் என்றால் என்ன?

## கதிர்காமர் சொல்கிறார் கேளுங்கள்

தமிழீழ விடுதலைப் புலிகள் பலவந்தமாக தனிநாடொன்றை அமைப்பதற்கு முயற்சிக்கின்றனர். எந்த ஒரு இறைமையுள்ள நாடும் இதனை அனுமதிக்க முடியாது. எனவே சுய பாதுகதப்புக்காக நாங்கள் போராட வேண்டும். ஆகவே நாங்கள் யுத்தத்தைத் தொடர்ந்து நடத்துவோம் இவ்வாறு அண்மையில் நோர்வேக்கு விஜயம் செய்திருந்த வெளிநாட்டமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர் ஒஸ்லோவில் வைத்து அளித்த வானொலி தொலைக்காட்சிப் பேட்டியில் கூறியுள்ளார்.

இத்தகைய பிரசாரம் இலங்கை அரசாங்கத்தினால் கொய்பல்ஸஜ் பாணியின் நடத்தப்பட்டு வருவது ஒன்றும் புதிய விடயமல்ல. விடுதலைப்புலிகள் மட்டுமல்ல ஆரம்பத்தில் ஏனைய தமிழ் குழுக்களும் தனிநாடு அமைப்பதற்காகவே ஆயுதப் போராட்டத்தில் இறங்கின. 3 தசாப்பதகாலமாக தமது இனவிடுதலைப் போராட்டத்தினை சாத்வீகமான முறையில் நடத்திய தமிழ் மக்கள் தோல்விகளைச் சந்தித்தது மட்டுமல்லாமல் இராணுவ அடக்குமுறைக்கும் ஆளாக்கப்பட்டனர். காலத்துக்குக் காலம் ஏவப்பட்ட பலத்த இனக்கலவரங்களுக்கும் அழிப்புகளுக்கும் ஆளாக்கப்பட்டனர். தென்னிலங்கையிலிருந்து வடக்கு கிழக்குக்குத் துரத்தப்பட்டனர். பின்பு அங்கேயும் சிங்கள இராணுவம் அனுப்பப்பட்டது. தமது சொந்தப் பிரதேசங்களிலோ, ஏன் தமது சொந்த விடுகளில் கூட பாதுகாப்பாக வாழ முடியாத சூழ்நிலை ஏற்பட்டது. ஒரு தமிழ் ஆராய்ச்சி மாநாட்டினை நடத்துவதற்கே தர்ம சங்கடமான நிலை உருவாக்கப்பட்டது. அங்கே திட்டமிட்ட செயல் காரணமாகத் தமிழ் மக்கள் கொல்லப்பட்டனர். கொலைகள் தொடர்ந்தன. கொடிய பயங்கரவாதத் தடைச் சட்டம் கொண்டு வரப்பட்டது. இளைஞர் கொலை செய்யப்பட்டு சடலங்கள் வீதிகள் தோறும் வீசப்பட்டன. எனவே தற்பாதுகாப்புக்காகவே தமிழ் மக்கள் தாம் ஆயுதம் ஏந்தும் நிலைக்குத் தள்ளப்பட்டனர்..

இவ்வாறான வரலாற்றுப் பின்னணியை அமைச்சர் கதிர்காமர் அறியாதவரல்ல. அவர் முழுப் பூசணிக்காயை சோற்றில் மறைக்கும் பணியில் ஈடுபடுத்தப்பட்ட நிலையில் அவர் அதனை திறம்படச் செய்வதற்கு அயராது பாடுபடுகிறார். உண்மையில் தனிநாட்டுக் கோரிக்கையும் யுத்தமும், சிங்களப் பேரினவாத அரசாங்கங்களாலேயே தமிழ் மக்கள் மீது திணிக்கப்பட்டன. தற்போதைக்குப் பேச்சு வார்த்தையில்லை. விடுதலைப்புலிகள் தனிநாட்டுக் கோரிக்கையைக் கைவிட வேண்டும் என்றும், அமைச்சர் கதிர்காமர் நிபந்தனையையும் விதித்துள்ளார். அதேவேளை முன்னால் ஜனாதிபதி ஜே. ஆர் ஜயவர்த்தன கூறிவைத்த பாணியில் அவர்களுக்கு யுத்தம் தான் வேண்டுமென்றால் அதுவே வழங்கப்படும். 50 வருடங்களுக்கு அல்ல 100 வருடங்களுக்கும் தொடரலாம். அவர்களில் நின்று பிடிக்க முடியாது. என்றெல்லாம் இந்த யுத்தத்தினை அடுத்துவரும் பரம்பரைகளுக்கும் பாரமளிப்போம் என்ற தொனியில் அவர் கூறியுள்ளார். படைகளிலிருந்து ஆயிரக்கணக்கில் தப்பியோடியுள்ளது மட்டுமல்லாமல் பத்தாயிரம் பேரைத் திரட்டுவதற்கும் அரசாங்கம் பகீரதப்பிரயத்தனம் செய்து வருகிறது. இது தொடர்பாக முன்னர் எடுத்த முயற்சிகளெல்லாம் தோல்வியில் முடிந்தன என்பதை யாரும் அறிவர்.

தமிழ்ப்புலிகளை விட படையினர் அதிகளவு எண்ணிக்கையில் உள்ளனரே என ஒரு பத்திரிகையாளர் அண்மையில் எழுப்பிய கேள்விக்கு, வடபகுதிக்கு பொறுப்பாயுள்ள இராணுவ அதிகாரி மேஜர். ஜெனரல் அன்ரன் விஜேரத்தின பதிலளிக்கையில் இது வியட்நாம் யுத்தம் போன்றதாகும் எனக் கூறியுள்ளார். வியட்நாமிலிருந்து அமெரிக்க ஏகாதிபத்தியமே பின்வாங்கியது வரலாறு.

தமிழ் மக்கள் தனிநாட்டுக்குப் போராட உரிமையில்லை என்று எவரும் கூற முடியாது. சிங்கள பேரினவாத அரசாங்கங்களின் அடாவடித்தனங்கள் இந்த நிலைக்கு இட்டுச் சென்றது என்பதை அரசாங்கத்தால் மறுக்காமல், மறைக்காமல் விட முடியவில்லை தனிநாட்டுக் கோரிக்கைக்கு தகுந்த மாற்றுத் திட்டம் அரசாங்கத்திடம் இல்லை. தமிழ் தாயகம் என்னும் போது பேரினவாதிகளுக்கு வேப்பங்காயாக இருக்கிறது. தமிழ் மக்களைப் புறக்கணித்து ஒதுக்கி வைத்து, அடக்கியொடுக்கி, பலத்த அழிவுகளுக்கு ஆளாக்கப்பட்ட நிலையிலேயே தனித்துவம் பேணுவதற்கும் தனிநாடு கோரவும் தள்ளப்பட்டனர். இதனை அரச தரப்பினர் விவேகமாக உணர்ந்து ஒரு நல்ல அரசியல் தீர்வைக் காண்பதற்குப் பதிலாக யுத்தம் யுத்தம் எனவே இன்றும் ஜனாதிபதியும் அவரை விட இன்றைய பிரதம மந்திரியும் முழங்கி வருகின்றனர்.

நோர்வே அதிகாரிகளுக்கு இலங்கை இனப்பிரச்சினை வரலாறு நன்கு தெரிந்த விடயம். மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் அடங்கலாக உலகளாவிய பல்வேறு மட்டங்களிலும் இந்த பிரச்சினை கைப்புண்ணுக்கு கண்ணாடி தேவையில்லை என்ற நிலையில் உள்ளது


விடுதலைப்புலிகள் பேச்சாளர் அன்ரன் பாலசிங்கம் அண்மையி அளித்த பேட்டியொன்றில் திம்பு கோட்பாட்டின் அடிப்படையி பேசலாம் என தெரிவித்திருந்தனர். வடக்கு கிழக்கு ஒரு அலகா ஏற்க மறுத்து அதனை துண்டாட எண்ணும் அரசாங்கத்திட ஐக்கிய இலங்கைக்கான அரசியல் தீர்வுத் திட்டம் கிடையாது அரசாங்கத்திற்கு தமிழ் மக்களில் மட்டுமல்ல சாதார ஏழைச்சிங்கள மக்களின் நலனிலும் அக்கறையில்லாததாலே யுத்தம் தொடர்கிறது.

படிப்பகம்

www.padippakam.com



# மதவெறி




**உலகமயமாக்கல் என்ற நடவடிக்கையால், மனித சமூகத்தின் பெரும்பான்மையோர் ஏழ்மை நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். இதனால் சமூகத்தில் அமைதியின்மை பலமடங்காக அதிகரித்துள்ளது. இந்நிலைமையில் பிற்போக்கான கொள்கைகளை உடையவர்கள் கூட முக்கியமானவர்களாகக் கருதப்படும் நிலையில் உலகம் உள்ளது. அடிப்படைவாதக் கருத்துக்கள் மிக வேகமாகப் பரவி வருகிறது. இந்தியாவில் இந்துவாதிகளின் வளர்ச்சி, இலங்கையில் பௌத்த பேரினவாதிகளின் கொக்கரிப்புக்கள், நாம்மேல் சொன்னவற்றைப் பிரதிபலிக்கின்றன. கடந்த ஓர் ஆண்டுக்கு முன்பாக இந்தியாவின் ஒரிசா மாநிலத்தில், கிறிஸ்த்தவ மதப்பிரிவின் மதகுரு ஒருவரையும், அவரது இரண்டு குழந்தைகளையும், கொலை செய்தமை தொடர்பான செய்திகள் பல்வேறு ஊடகங்களின் மூலமாக வெளிவந்தன. அண்மையில் இக்கொலைக்குக் காரணமானவர் எனக் கருதப்படும் 13 வயது சிறுவனுக்கு 14 ஆண்டுகள் சிறைத் தண்டனை வழங்கப்பட்டு உள்ளது. சிறுவனாக இருந்தமையால், வழக்கு தனியாக விசாரிக்கப்பட்டு, இத்தண்டனை வழங்கப்பட்டுள்ளது. இக்கொலை தொடர்பாக தேடப்பட்ட சந்தேக நபரான தாராசிங் கைது செய்யப்பட்டு தடுப்புக் காவலில் இருந்தபோது, வழங்கிய செவ்வியைப்பார்ப்போம்.**

உமது உண்மைத் தொழிலென்ன?

நான் கிராமம், கிராமமாக சென்று இந்து மதத்தையும், பசுக்களையும் பாதுகாத்து வருகிறேன். இதற்காக நான் சிறு கூட்டங்களை வைத்து மக்களை இந்து மதத்தில் நம்பிக்கை கொள்ள வைக்கின்றேன். இந்து மதத்தில் உள்ளவர்களை கிறிஸ்த்தவ மதத்திற்கு மாற்றம் செய்யும் நடவடிக்கைகளை நான் வெறுக்கிறேன். கிறிஸ்தவ மதப்பிரிவினர் கட்டாயப்படுத்தியும், பல்வேறு பிழையான நடவடிக்கைகளை கையாண்டுமே இதை மேற்கொள்கின்றார்கள். ஏழை இந்து மக்களுக்கு நெல், பணம் முதலியவற்றை கொடுத்தே இதைச் செய்கின்றார்கள்.

கிறிஸ்த்தவ மதபீடங்கள் சொல்கின்றனவே தாம் யாரையும் கட்டாயப்படுத்தி மதத்தில் சேர்ப்பதில்லையென்று?

இதை மக்களிடம் நேரில் கேளுங்கள், மக்களை கேட்டால் உண்மை தெரியவரும்.

ஒரு மனிதன் தனது விருப்பத்தின் பிரகாரம் மதம் மாறினால் நீர் எத்தகைய நடவடிக்கையை மேற்கொள்வீர்?

எந்த ஒரு மனிதனும் விரும்பி மதம் மாறுவது இல்லை என்பதே எனது முடிவு. அவன் பலாத்காரமாகவே மாற்றப்படுகின்றான்.

மறைந்த மதபோதகர் கிறகம் செறெயின்ஸ் இத்தகைய முயற்சியில் ஈடுபட்டிருந்தாரா?

ஆம்.

இதற்காகத்தான் கிறகம் ஸ்ரெயின்ஸ் கொல்லப்பட்டாரா?

மக்கள் இவரின் நடவடிக்கையைக் கண்டு வெறுப்படைந்து இருந்தனர்.

யார் இந்த மக்கள் அவர்கள் உமது ஆதரவாளர்களா?

நான் சொல்வது பொதுமக்களை. அவர்களில் எனது ஆதரவாளர்களும் இருக்கலாம்.

உமது ஆதரவாளர்கள் ஸ்ரெயின்ஸ்சை கொன்றிருக்கலாமா?

இருக்கலாமோ, இல்லையோ என்பதை இந்த நேரத்தில் சொல்ல முடியாது.

அருட் தந்தை அருண்டொஸ், வர்த்தகர் சேதித் றெகுமான் ஆகியோரது கொலைகளுக்கு நீர் சம்பந்தப்பட்டிருப்பதாக கூறப்படுகிறது?

என்னை இதற்குள் இப்போது சம்பந்தப்படுத்தி இருக்கிறார்கள்.

உமது ஆதரவாளர்கள் இதில் சம்பந்தப்பட்டிருக்கிறார்களா?

என்னால் இது பற்றி சரியாக எதுவும் கூறமுடியாது. ஆனால் இச்சம்பவம் நடைபெற்ற இரண்டு இடங்களிலும் முஸ்லீம்களும், கிறிஸ்த்தவர்களும் பயங்கரமான முறையில் இந்துக்களை அடக்குகின்றனர்.

எல்லோரும் சொல்கின்றார்கள். நீர் தான் கிறகம் ஸ்ரெயின்ஸ் படுகொலைக்குப் பொறுப்பானவர் என்று?

நான் இதில் சம்பந்தப்படவில்லை.

கிறகம் ஸ்ரெயின், பிள்ளைகள் சித்திரவதை செய்யப்பட்டு கொல்லப்படும் போது நீர் அந்த இடத்தில் இருந்ததாக சொல்லப்படுகிறது. அதுபற்றி?

நான் அந்தக் கிராமத்தில் இருந்து 10, 12 மைல் தூரத்தில் உள்ள வேறு கிராமத்தில் அன்று நின்றேன்.

திருமதி கிறகம் ஸ்ரெயின்ஸ் கூறுகிறார்: நீர்தான் தனது கணவனினதும் பிள்ளைகளினதும் கொலைக்குப் பொறுப்பு என்று?

அவர் பொய் சொல்கிறார். எனக்கு இதில் எத்தகைய சம்பந்தமும் இல்லை.

நீர் கிறகம் ஸ்ரெயின்சின் இரண்டு குழந்தைகள் கொல்லப்பட்டதற்கு கவலைப்படுகின்றீரா?

நான் கவலைப்பட மாட்டேன். போரில் மரணம் அடையும் இராணுவத்தினருக்காக கவலைப்படுவேன். வடக்கு கிழக்கில் இருக்கும் பொதுமக்களுக்காக கவலைப்படுவேன்.

உமது பசுக்கள் பாதுகாப்புத் திட்டம் எப்படிப் போகிறது?

எனது கிராமத்தில் ஆயிரக்கணக்கான பசுக்கள் முன்பு கடத்தப்பட்டன. இதற்காக பொலிசாருக்கு லஞ்சம் கொடுக்கப்பட்டது. நானும் எனது ஆதரவாளர்களும் இதைத் தடுத்துள்ளோம்.

நீர் பசுக்களை கொல்லப்படுவதைத் தீவிரமாக எதிர்க்கின்றீர். ஆனால் ஆடு கொல்லப்படுவதை ஏன் எதிர்க்கவில்லை?

இந்து சமயத்தில் பசுவின் இடத்தில் ஆடு இல்லை, ஆனாலும் மிருகங்கள் கொல்லப்படுவதை ஆதரிக்க முடியாது.

நீர் சைவ உணவு உண்பவர் அல்லவா?

ஆம்.

நீர் ஆர். எஸ். எஸ். பி. அங்கத்தவரா?

இல்லை. நான் VHP அங்கத்தவர்.

உமக்கு பி. ஜே. பி. பாராளுமன்ற அங்கத்தவர் உபேந்திரநாயக்குடன் தொடர்பு உண்டுதானே?

நாங்கள் அயலவர்கள். அதனால் நண்பர்கள்.

நீர் அவருக்கு தேர்தலில் உதவி செய்துள்ளீரா?

ஆம். நான் அவருக்கு மாத்திரம் அல்ல வேறு பலருக்கும் உதவி செய்துள்ளேன். நான் எந்தக் கட்சிக்கும் எதிரானவன் அல்ல. நான் எல்லோருடனும் நன்றாகவே இருக்க விரும்புகின்றேன்.

காங்கிரஸ்காரரோடு எப்படி?

நான் அவர்களுடன் நன்றாகவே உறவாக உள்ளேன். அவர்களும் எனக்கு உதவியிருக்கின்றார்கள்.

நீர் ஆர். எஸ். எஸ். பி., வி.எச்.பி. என்பவற்றுடன் தொடர்பு இல்லை என்கிறீர். ஆனால் உமது வேலைகள் அவர்களது சிந்தனைகள் போல் தெரிகிறதே?

ஆம். ஆனால் நான் சிவசேனையை விரும்புகின்றேன்.

நீர் பால்தக்கறே பற்றி அறிந்திருக்கின்றீரா?

ஆம். அவர் ஒரு நேர்மையான மனிதர். இதனால் அவரைச் சந்திக்க விரும்புகின்றேன்.

உம்மைப் பொலிசார் கைது செய்தனரா அல்லது நீர் சரண் அடைந்தீரா?

எல்லாம் பொய்.

நீர் ஏன் சரண் அடைந்தீர்?

பொலிசார் பொதுமக்களைத் துன்புறுத்துவதை என்னால் சகிக்க முடியவில்லை.

பொலிசார் உம்மை எப்படி பொலிஸ் நிலையத்தில் நடத்தினர்?

என்னை நன்றாகவே நடத்தினர். குற்றவியல் பிரிவினர் மோசமாக நடத்தினர்.

சி. பி. ஐ எப்படி நடத்தினர்?

அவர்கள் நன்றாக நடத்தினர்.

உமது வழக்கு எத்தகைய முடிவில் போய் முடியும்?

நான் நிரபராதி என்ற படியால் விடுதலையானேன். நீதியில் எனக்கு நம்பிக்கையுண்டு

நீர் அரசியலில் பிரவேசிப்பீரா?

எனக்கு அதில் நாட்டமில்லை. தேவை ஏற்பட்டால் பிரவேசிப்பேன்.

நீர் உமாபாரநியை சந்தித்து உள்ளீரா?

ஆம் எனக்கு அவரைத் தெரியும்.

வேறு எந்த அரசியல்வாதிகளை உமக்குத் தெரியும்?

எனக்கு சிலரைத் தெரியும்.

உம்மைப்போல் வேறு சிலரும் வேலை செய்கிறார்கள் அது உமக்கு தெரியுமா?

தெரியும்.



நீர் கிறகம் ஸ்ரெயின்சின் இரண்டு குழந்தைகள் கொல்லப்பட்டதற்கு கவலைப்படுகின்றீரா?

நான் கவலைப்பட மாட்டேன். போரில் மரணம் அடையும் இராணுவத்தினருக்காக கவலைப்படுவேன். வடக்கு கிழக்கில் இருக்கும் பொதுமக்களுக்காக கவலைப்படுவேன்.

அவர்களும் குழப்பங்களை விளைவிக்க முயல்வார்கள் தானே?

நிச்சயம் மதமாற்ற நடவடிக்கைகளை தொடர்ந்தால் நிச்சயம் செய்வார்கள்.

குழப்பங்கள் மரணத்தையும் உள்ளடக்குமா?

யார் அப்படி சொன்னது.

பொதுமக்களிடம் உமக்கு எவ்வாறு ஆதரவு கிடைத்தது?

பொலிசார் என்னைத் தேடும்போது நான் எனது பகுதியை விட்டு வெளியேறவில்லை. 10 அல்லது 12 தரம் எனக்கு மலேரியா வந்தது. பொதுமக்களே எனக்குச் சிகிச்சையளித்தனர். என்னைப் பாதுகாப்பதில் பொதுமக்கள் கரிசனையாக இருந்தனர். இந்த நிலையில் பொலிசார் என்னை பிடித்தது என்பது அப்பட்டமான பொய்.

எவ்வாறு பொழுதைக் கழிக்கின்றீர்?

நிறைய பத்திரிகை வாசிக்கின்றேன். இராமாயண, மகாபாரத கதைகளைப் படிக்கின்றேன்.

விடுதலையாவீர் என நினைக்கின்றீரா?

அத்தகைய நம்பிக்கை பெரிய அளவில் எனக்கு உண்டு. ஆனால் பொலிசார் பெரியளவில் குற்றச்சாட்டுக்களைச் சோடித்துள்ளனர்.

படிப்பகம்

www.padippakam.com



# வேசம் கலைந்த ஜனதா விமுக்தி பெரமுன

**மார்க்சியவாதிகளாக** தம்மை கூறிக்கொள்ளும், ஒரு அரசியல் கட்சியினர், இனவாதிகள் ஆகிய நிலை இலங்கையில் மட்டுமே உள்ளதாகத் தெரிகிறது. ஜனதா விமுக்தி பெரமுனையின் அண்மைக்கால நடவடிக்கைகள் மேற்படி கருத்துக்கு வலுவூட்டுவதாக உள்ளது. மலையக மக்களுக்கு எதிராக தமது அரசியல் பயணத்தைத் தொடங்கிய ஜனதா விமுக்தி பெரமுனையின் அரசியல் வரலாறு, இன்று இலங்கை தமிழ் தேசிய இன விடுதலை போராட்டத்துக்கு எதிரான போக்கில் போய் முடிந்துள்ளது. கடந்த பாராளுமன்றத்தில் சந்திரிகா கொண்டு வந்த புதிய அரசியல் திட்டத்திற்கு எதிராக நாடு தழுவிய ரீதியில் ஜனதா விமுக்தி பெரமுன போராட்டங்களை நடத்தியது. சந்திரிக்காவின் அரசியல் திட்டத்தில் உள்ள எல்லா அம்சங்களுக்காகவும் ஜனதா விமுக்தி பெரமுன எதிர்ப்புக் காட்டவில்லை. அந்த அரசியல் திட்டத்தில் தமிழ் மக்களுக்கு வழங்கப்பட இருந்த சில பிரிவுகளுக்காகவே இந்த அமைப்பு மிக ஆக்கிரோசத்துடன் எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டது. இதில் கவலையளிக்கும் விடயம் என்னவென்றால், சந்திரிகா கொண்டுவந்த புதிய அரசியல் திட்டத்திற்கு தமிழ் அமைப்புக்கள் எவையும் ஆதரவு கொடுக்க முன்வரவில்லை. அரசை ஆதரித்த தமிழ் அமைப்புக்கள் கூட சந்திரிகாவின் திட்டத்தை ஏற்கவில்லை. தமிழ் அமைப்புக்கள் சந்திரிகாவின் புதிய அரசியல் அமைப்பை ஏற்காததற்கு பிரதான காரணம், அந்த அரசியல் அமைப்பில் தமிழ் மக்களின் எதிர்பார்ப்புகளைத் திருப்தி செய்யக்கூடிய எந்த அம்சமும் உள்ளடக்கப்படாமையே ஆகும்.

சந்திரிகாவின் புதிய அரசியல் திட்டத்திற்கு எதிரான நடவடிக்கைகளுக்காக ஜனதா விமுக்தி பெரமுன, இனவாதிகளுடன் கூட்டுச் சேர்ந்து எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

இன்று தென் இலங்கையில் பச்சை இனவாதத்தைக் கக்கித்திரியும் அமைப்புகளின் தலைவர்களான மாதுள சோபித தேரோ, சம்பிக ரணதுகே, போன்றவர்களுடனேயே ஜனதா விமுக்தி பெரமுன நெருங்கி செயற்பட்டு வருகின்றது.

தேர்தலில் மாற்றம் செய்ய, பொலிஸ் ஆணைக்குழு, சுதந்திர நீதிச்சேவை ஆணைக்குழு போன்றவற்றிற்கு ஆதரவு வழங்கத் தயாராக இருக்கும் ஜனதா விமுக்தி பெரமுன தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்காக முன் வைக்கப்படும் அனைத்து தீர்வுகளையும் எதிர்த்து வருகிறது.

சிறுபான்மைக் கட்சிகளின் தயவில் சந்திரிக்கா அரசமைக்கத் தேவை இல்லை என்றும், தாம் அரசுக்கு நிபந்தனை அற்ற முறையில் ஆதரவு வழங்கத் தயாராக இருப்பதாகவும், ஜனதா விமுக்தி பெரமுன வெளிப்படையாகவே அரசுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளது. பேரினவாத முதலாளித்துவக் கட்சிக்கு ஆதரவு வழங்கத் தயாராக இருக்கும் இவ்வமைப்பு தமிழ் தேசிய இனப்பிரச்சினையில் இவ்வளவு எதிர்மாறாக இருப்பதன் மர்மம் என்னவென்று தெரியாது உள்ளது.

ஜப்பானில் ஒக்கினோவா மாநிலத்தில் அமெரிக்கப் படைகள் இருப்பதைக் கண்டிக்கிறது, இஸ்ரேல் பாலஸ்தீன மக்களுக்கு புரியும் கொடுமைகளைக் கண்டித்து மறியல் போராட்டம் செய்கிறது. யூகோஸ்லாவியாவில் சீனத் தூதரகம் தாக்கப்பட்டமைக்காக ஊர்வலம் நடத்துகின்றனர். ஆனால் 60,000 மக்களைப் பலி கொண்ட தமிழ் மக்களின் போராட்டத்தில் இரக்கமே



இல்லாமல் ஜனதா விமுக்தி பெரமுன இருக்கின்றது.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தைப் பிரிவினை வரை ஆதரிக்கின்ற புதிய இடதுசாரி முன்னணியுடன் கூட்டுச் சேர்ந்து போட்டியிட்ட ஜனதா விமுக்தி பெரமுன, கடந்த பாராளுமன்றத் தேர்தலில் தனி இனவாத கோரிக்கைகளுடன் போட்டியிட்டமை அதன் சந்தர்ப்பவாதப் போக்கையே காட்டுகின்றது.

ஜனதா விமுக்தி பெரமுனயின் மறைந்த தலைவர் ரோஹன விஜேவீர மதத்துடன், அரசியலை கலப்பதைக் கண்டித்தே வந்தார். ஆனால் தற்போதைய தலைவர்கள் பௌத்த மத பீடங்களுடன் அதிக தொடர்புகளை வைத்துள்ளனர். குறிப்பாக கடந்த பாராளுமன்றத் தேர்தலில் பௌத்த மதத் தலைவர்களின் ஆசீர்வாதங்களைப் பெறுவதற்காக இத் தலைவர்கள் அலைந்து திரிந்ததை செய்தி ஊடகங்களின் படங்களுடன் அறியக் கூடியதாக இருந்தது.

கடந்த பொதுத்தேர்தலில் ஜனதா விமுக்தி பெரமுன தமிழ் மக்களுக்கு எதிரான இனவாத கருத்துகளையே மேடை மேடையாக பேசி வந்தனர். இவர்களுடன், சிங்கள உருமைய அமைப்பின் முக்கியஸ்தர்களான எஸ். எல். குணசேகரா, சம்பிக ரணவகே, மற்றும் பொதுஜன முன்னணியின் தலைவரான ரத்னசிறி விக்கிரமநாயக்கா போன்றோரும், இனவாதத்தையும், யுத்தத்தையும் ஆதரித்தே பேசி வந்தனர். இவர்களின் பேச்சுக்களின் தாக்கமே இன்று, பிந்துனுவெவ போன்ற சம்பவங்கள் நிகழ்வதற்கு வழிசமைத்தவையாக உள்ளன.

ஜனதா விமுக்தி பெரமுனயினர் லிப்டன் சுற்று வட்டாரத்தில், 1/11/00 அன்று பிந்துனுவெவ சம்பவத்தை கண்டித்து ஆர்ப்பாட்டம் நடத்தினர். ஒரு பக்கத்தில் பேரினவாத கட்சியான பொதுஜன முன்னணிக்கு ஆட்சி அமைக்க நிபந்தனை அற்ற விதத்தில் ஒத்துழைப்பு வழங்குகிறோம் என்று கூறிக் கொண்டு, மறுபுறத்தில் லிப்டன் சதுக்கத்தில் மறியல் போராட்டம் செய்வது யாரின் காதில் பூவை வைப்பதற்கு.

இரண்டு தசாப்தங்களுக்கு மேலாக நடைபெறும் யுத்தத்தை நிறுத்துவதற்கு ஜனதா விமுக்தி பெரமுனக்கு இஷ்டமில்லை. வடக்கு, கிழக்கு தமிழ் மக்களின் தாயகம் என்று கூறுவதற்கு அவர்கள் ஒரு போதும் சம்மதிக்க மாட்டார்கள். மறுபுறத்தில் இனவாத அமைப்புகளுடன் இறுக்கமாக தொடர்புகளை வைத்து செயற்பட்டும் வருகின்றார்கள்.

பாராளுமன்ற ஆசனங்களை அலங்கரிப்பதற்காக புதிய பாணி ஒன்றை ஜனதா விமுக்தி பெரமுன கடைப்பிடிக்கின்றது.

இனவாத செயற்பாடுகளில் முன் நிற்கும் ஜனதா விமுக்தி பெரமுனயினர், சில சமயங்களில் ஏனைய தேசிய இனங்களின் ஏனைய தேசிய இனங்களின் முகங்களை தமது முக்கிய நிகழ்வுகளில் காட்டுவதும் ஒரு ஏமாற்று வித்தையாகும். ஒரு இனத்துக்குரிய கௌரவத்தை வழங்காது, அந்த இனத்தின் ஒருவரை மேடைகளில் அலங்காரப் பொருளாகக் காட்டுவது கவலைக்குரிய விடயமாகும்.

நாட்டில் நடைபெறுகின்ற யுத்தத்தை நிறுத்த, தமிழ் ஈழ விடுதலைப்புலிகளுடன் பேச்சு வார்த்தைகள் செய்வதை விரும்பாத இவ்வமைப்பின் செயற்பாடுகளை முண்டியடித்துக் கொண்டு, பிரதான செய்திகளாக வெளியிடும் செய்தி ஊடகங்களும் இருக்கத்தான் செய்கின்றன.

ஒரு மார்க்சீய கட்சிக்கு தேசிய இனப்பிரச்சினை முக்கிய உரை கல்லாக விளங்குகின்றது. சர்வதேசமே அங்கீகரிக்கின்ற நிலையில் இருக்கின்ற தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தை தன்னை ஒரு மார்க்சீய கட்சி என அழைக்கின்ற ஜனதா விமுக்தி பெரமுன மறுதலிப்பது புத்தாயிரம் ஆண்டின் வினோதங்களில் ஒன்றாக இருக்கிறது.

துரித கெதியில் நடைபெறும் தனியார் மயமாக்கலை கண்டிப்பதற்கு மக்கள் விடுதலை முன்னணி தயார் இல்லை, வாழ்க்கைச் சுமையால் தவிக்கும் தொழிலாளர் போராட்டங்களை முன் எடுத்துச் செல்ல ஜனதா விமுக்தி பெரமுன அக்கறையற்று உள்ளது. பேரினவாதத்தில் ஊறிப் போய் இருக்கும் இரு கட்சிகளின் கைகளிலிருந்து ஆட்சியை அகற்றுவதற்கு வலுவான முன்னணி ஒன்றை அமைக்க திராணியற்றும் உள்ளது.

ஆனால் தமிழ்ஈழ விடுதலைப் புலிகளுக்கு எதிராக வார்த்தைக் கணைகளை வீசவும், தமிழ் தேசிய இன விடுதலைப் போராட்டத்தை கொச்சைப்படுத்தவும் 24 மணி நேரமும் ஜனதா விமுக்தி பெரமுன தயார் நிலையில் இருக்கிறது. தமிழ் மக்களின் வாக்குகளை வலதுசாரி ஐக்கிய தேசியக் கட்சிக்கு வாங்கிக் கொடுக்கத் துடிக்கும் வலதுசாரி தமிழ் பிரிவுகள் ஒருபக்கம், ஆட்சியாளருடன் ஒட்டி உறவாடுவதன் மூலம், காலத்தைக் கழிக்க எண்ணும் தமிழ் குழுக்கள் மறுபுறம், இவற்றினிடையே தமிழ் மக்களின் தேசிய அவாவை இனவாதமாக அர்த்தம் கொண்டு அதற்கு எதிராக அணிதிரளத் துடிக்கும் மார்க்சிய இனவாத ஜனதா விமுக்தி பெரமுன இன்னொரு பக்கம்.

இவர்களிடமிருந்து தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தைக் காப்பாற்ற நிபந்தனையற்ற முறையில் அணிதிரள வேண்டியது ஒவ்வொரு முற்போக்கு சக்தியினதும் கடமையாகும்.

# ஜே.வி.பியின் அப்பட்டமான பொட்டுக்கேடு

பிந்துனுவெவ படுகொலைகளுக்கு கண்டனம் தெரிவிக்கும் ஜே. வி. பி. அதே மூச்சில் அந்த மிலேச்சக் கொலைகளால் பாதிக்கப்பட்ட மக்களால் நடத்தப்பட்ட எதிர்ப்புப் போராட்டத்திற்கும் கண்டனம் தெரிவித்துள்ளது. எப்பக்கத்திலிருந்து இனவாதம் கிளம்பினாலும் அதனை எதிர்த்து முறியடிப்பதற்கும் அத்தோடு பிரிவினை வாதத்தினை எதிர்ப்பதற்கும் எல்லோரும் தயாராயிருக்க வேண்டும் என ஜே. வி. பி.யின் பிரசாரத் செயலர் விமல் வீரவங்ச கூறியுள்ளார்.

பிந்துனுவெவவில் கொலை செய்யப்பட்ட 29 இளைஞர்களும் படுகாயங்களுக்குள்ளாகிய 20க்கும் மேற்பட்டவர்களும் வடக்கு, கிழக்கு மற்றும் மலையகத்தைச் சேர்ந்த தமிழர்கள். அச்சம்பவத்தினை எதிர்த்து வடக்கு, கிழக்கில் பல பாகங்களிலும் புதிய இடதுசாரி முன்னணியின் ஏற்பாட்டின் பல அமைப்புக்கள் அடங்கலாக கொழும்பிலும் போராட்டங்கள் நடத்தப்பட்டன. இப்போராட்டங்கள் எல்லாம் கூட இனவாதத்தைத் தூண்டும் நடவடிக்கைகள் என்பதே ஜே.வி.பியின் தர்க்கமா? அப்படியென்றால் சிங்கள பேரினவாத சக்திகள் அரச அனுசரணையுடன் கொன்று குவித்துக் கொண்டிருக்க வேண்டியது தான். தமிழினம் கைகட்டி வாய் பொத்தி வாழாவிருக்க வேண்டியது தான்! போலி இடதுசாரிகளின் பொட்டுக்கேடு அப்பட்டமாகத் தெரிகிறதல்லவா?

மலையகத்தைப் பொறுத்தவரை பிந்துனுவெவ கொலைகளால் பாதிக்கப்பட்ட மக்கள் மலையக மக்கள் முன்னணித் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமாகிய பெரியசாமி சந்திரசேகரன் தலைமையில் தலவாக்கெல்லையில் போராட்டம் நடத்தப்பட்டது. பொலிசாரின் முன்னிலையில் அமைதியாக நடத்தப்பட்ட அப்போராட்டத்தினைத் திசை திருப்புவதற்கு பேரினவாதிகள் முயற்சி மேற்கொண்டனர். மோட்டார் சைக்கிளில் சென்று போராட்டத்தைக் குழப்ப முயன்றனர். பதற்றம் ஏற்படுத்தப்பட்டது. இதனையடுத்து பொலிசார் வேட்டுகளைத் தீர்த்தனர். நான்கு தொழிலாளர் கொல்லப்பட்டனர். பலர் காயமடைந்தனர். அதன் பின் வன்செயல்களைத் தடுக்க முடியுமென்று இடதுசாரி ஜே.வி.பி. எண்ணுகிறதா? ஆத்திரமடைந்த மக்கள் புகையிரதத்திற்கு தீவைத்ததாக அறிக்கைகள் கூறினாலும் கூட அதே நேரத்தில் 150க்கு மேற்பட்ட சிங்களப் பயணிகளை புகையிரதத்திலிருந்து இறக்கி தமிழ் தொழிலாளர்கள் பாதுகாத்ததை அப்பகுதி பொலிஸ் பிரதி மா அதிபர் பாராட்டியுள்ளார் என்பதும் அறிந்த விடயமாகும்.

பிந்துனுவெவ கொலைகாரர்களைக் கண்டு பிடிக்கவில்லை. தலவாக்கொல்லைப் போராட்டத்தின் குழப்பம் விழைவித்த பேரினவாத சூத்திரதாரிகளைக் கண்டு பிடிக்கவில்லை. பிந்துனுவெவ படுகொலைகளால் பாதிக்கப்பட்டு ஆத்திரமடைந்த மலையகத் தமிழ் உழைக்கும் மக்கள் நடத்திய போராட்டம் இனவாத வன்முறை கொண்டது. கண்டனத்துக்குரியது என்றெல்லாம் அர்த்தம் கற்பிக்கும். ஜே.வி.பி. இதற்குத்தானா கொழும்பு கோட்டையில் மறியற் போராட்டம் நடத்தியது என்று எண்ணத் தோன்றுகிறது. சந்திரசேகரன் கைது செய்யப்பட்டதையிட்டு ஜே.வி.பியினர் மூச்சும் விடவில்லை. மலையகத் தொழிலாளர்களின் போராண்மை வரலாற்றினை பலர் மறந்து விட்டனர். ஆனாலும் துப்பாக்கி வேட்டுக்கு முகம் கொடுத்து முல்லோயாவில் நடத்திய போராட்டத்தில் தான் கோவிந்தன் உயிர்த் தியாகம் செய்தார். மற்றும் வெவச தோட்டத்தில் இடம் பெற்ற போராட்டத்தில் ஏகாதிபத்திய வாத முகாமைத்துவத்துக்கு முறையான பாடம் புகட்டப்பட்டது. பழைய இடதுசாரிகள் இடதுசாரிகளாக இருந்த காலம் அது. உண்மையான இடதுசாரி இயக்கம் தான் மனிதநேய இயக்கம். மனித நாகரிகத்தையும் விழுமியங்களையும் பேணும் இயக்கம். அதுவே கட்டியெழுப்பப்பட வேண்டிய இயக்கம்.

வ. திருநாவுக்கரசு

படிப்பகம்

www.padippakam.com



# புதிய இடதுசாரி முன்னணி பார்வையில் பாராளுமன்றத் தேர்தல் – 2000

**கடந்த** பாராளுமன்ற பொதுத் தேர்தல் வன்முறை அச்சுறுத்தல் மற்றும் ஊழல் நிறைந்ததாக இருந்தது. இந்தச் சூழ்நிலையில் இடதுசாரிகளின் தேர்தல் பிரசாரம் அடிபட்டு போய்விட்டது. சிங்கள இனவாத ஜுசிஹல உறுமயஜி எந்த ஒரு மாவட்டத்திலும் ஒரு ஆசனத்தையும் வென்றெடுக்காவிடினும் எல்லாப் பெரிய கட்சிகளையும் தமது இனவாதக் கோஷங்கள்/சுலோகங்கள் பக்கம் ஈர்த்துள்ளது. பொ. ஐ. மு., ஐ. தே. க. மட்டுமல்லாது ஜே. வி. பி. யும் கூட சிஹல உறுமய வெளிப்படுத்திய இன வெறிப்போக்கிற்கு முற்று முழுதாக ஆட்பட்டு விட்டது. ஜே. வி. பி. சிஹல உறுமயவின் சுலோகங்களைத் தமது கைகளில் எடுத்ததன் மூலம் சிஹல உறுமயவின் முன்னேற்றத்தைத் தமதாக்கிக் கொண்டது. ஆகக்குறைந்தது இவ்வாறு தான் அவர்கள் எண்ணுகின்றனர். ம. வி. மு., சிஹல உறுமய கட்சியை எதிர்ப்பதற்கு அதனையே பின்பற்றியது. அதேவேளை பொ. ஐ. மு. முதலாவதாக விடுதலைப் புலிகளுக்கு எதிராக யுத்தம், அதன் பின்பு தமிழர்களுக்கான தீர்வு என்ற சுலோகத்தைக் கையாண்டது. உண்மையில் பொ. ஐ. மு. தனது இந்தச் சுலோகத்தின் நம்பகத் தன்மையை உறுதிப்படுத்துவதற்காகப் புதிய இராணுவ நடவடிக்கைகளையும் மேற்கொண்டது.

மறுபக்கத்தில் ஐ. தே. கட்சியானது தனது தேர்தல் பிரசாரத்தில் பௌத்த பீடத்திற்கு ஏற்புடைய தீர்வுத் திட்டத்தினை விடுதலைப் புலிகளுக்கு முன்வைத்துப் பேச்சுவார்த்தை நடத்தப் போவதாகக் கூறி வந்தது. அதாவது, அவர்கள் விடுதலைப் புலிகளுக்கும், சிஹல உறுமய கட்சிக்கும் இடையிலான தரகர்களாகச் செயற்பட ஆயத்தமாக இருந்தனர்.

இவ்வாறாக எல்லாக் கட்சிகளும் சிஹல உறுமய கட்சியின் தாளத்திற்கு ஆடிக் கொண்டிருந்தன. இத்தகைய பேராபத்தான நிலையில் தொழிலாளி வர்கத்தினரில் பெரும்பாலானோர் பொ. ஐ. மு. யுள் காணப்படும் மக்கள் வாத சக்திகளின் பின் சென்றனர். தமிழ், முஸ்லிம் மக்களின் பெரும்பான்மை-யானோர் ஐ. தே. க. யை சற்று நம்பலாம் என்று எண்ணி ஆதரித்தனர். அதே நேரம், தொழிலாளர்களோ, தமிழ்ப் பேசும் மக்களோ, இளைஞர்களோ நாங்கள் விடுத்த வேண்டுகோளை செவிமடுக்க ஆயத்தமாய் இருக்கவில்லை. விசுவாசம் உள்ள மக்களைத் தவிர இடதுசாரிகளை எல்லோருமே கைவிட்டு விட்டனர்.

சிஹல உறுமய கட்சி, எல்லாப் பெரிய ஊடகங்களாலும் ஆதரிக்கப்பட்டு வந்தது. மட்டுமன்றி அக்கட்சியின் இனவாத நிலைப்பாடும் பரப்பப்பட்டது. சமாதானம் மற்றும் தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு வேண்டும் எனப் பிரசாரம் செய்தவர்களுக்கு மிகவும் அற்பமான விளம்பரமே இந்த ஊடகங்களில் கிடைத்தது. தமிழ் பேசும் மக்களுக்குச் சுயாட்சி என்ற நிலைப்பாட்டினைத் தோற்கடிப்பதற்கு பொ. ஐ. மு., ஐ. தே. க., ஜே. வி. பி. மற்றும் சிஹல உறுமய எல்லாமே பகீரதப் பிராயத்தனம் மேற்கொண்டன. இந்தத் தேர்தல் பிரசாரம் முழுவதிலுமே யார் கூடிய சிங்களப் பேரினவாதி என்ற போட்டி-தான் இந்த நான்கு கட்சிகளுக்-கிடையே நடைபெற்றது. எனவே இந்த முழுத் தேர்தலிலுமே அரசியல் காடைத்தனமே நிறைந்து காணப்பட்டது.

வடக்கு-கிழக்கு தமிழ்ப் பகுதிகளில் தமிழ் விடுதலைப் புலிகளின் எச்சரிக்கை விடுத்தும் கூட தமிழ் மக்கள் வாக்களித்துள்ளார்கள். அகில இலங்கைத் தமிழ் காங்கிரசும் தமிழர் விடுதலைக் கூட்டணியும் தெரிவு செய்யப்பட்டமை அரசுக் கெதிராகன தமிழ் மக்கள் உண்மையில் இத் தேர்தலில் பங்கு பற்றியுள்ளனர் என்பதைக் காட்டுகின்றது. எனவே தமிழ் மக்கள் அரைகுறையாகவேனும் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்டுள்ளனர் என்பது புலனாகின்றது. ஈழ ஜனநாயக கட்சி அரசாங்கத்தை ஆதரித்தது. அதில் பங்குபற்றும் என்பது தெரிந்ததே. அதே நேரத்தில் த. வி. கூ. விடுதலைப் புலிகளின் அழுத்தம் குறைவாயிருந்தால் வெளியே இருந்து அரசாங்கத்துக்கு உதவ நிர்ப்பந்-திக்கப்படும். இப்படி இல்லாவிட்டால் அரசாங்கம் வெற்றிகரமாக இயங்க முடியாமற் போகலாம். மறுபுறமாக ம. வி. மு. யானது சிஹல உறுமய கட்சியின் குரலை மேம்படுத்துவதுடன், தொடர்ந்து ஸ்திரத் தன்மை இல்லாத-விடத்து ஐ. தே. க.க்கு ஆதரவாகச் செயற்படும். ஜே. வி. பி. ஐக்கிய தேசி-யக் கட்சியுடன் இணைந்து ஜனநாய-கத்தைப் பாதுகாப்பதற்காகவென தேர்தல், பொலிஸ் மற்றும் அரச சேவை தொடர்பாக ஆணைக்குழு நியமிக்க வேண்டுமென்ற கோரிக்கையை மட்டும் முன்வைத்து யுத்தத்தினால் ஜனநாயகத்திற்கு ஏற்பட்டிருக்கும் ஆபத்தினை மூடிமறைக்க முயல்கிறது. எனவே சிஹல உறுமய கட்சியானது எதிர்க் கட்சியைத் தூரத்தில் இருந்து கட்டுப்படுத்துவது மட்டுமல்லாமல், அரசாங்கத்தையும் அவ்வாறு கட்டுப்படுத்த முற்படும். இதனால் யுத்தமும், பொருளாதார அழிவும் தொடரும். தொழிலாளி வர்க்கம் பொருளாதார மற்றும் சமூகப் பிரச்சினைகள் தொடர்பான போராட்டங்களை முடுக்கிவிடும் என்பது தான் ஒரே நம்பிக்கையாக உள்ளது. அத்தகைய போராட்டம் வளர்ச்சி பெறுமாயின், அது முழு அரசியல் யாப்பையுமே மாற்றியமைக்கும். அத்தகையதொரு நிலையில் புதிய இடதுசாரி முன்னணி போராட்டங்களில் ஈடுபடும் என உறுதி கூறுகிறது.

32,000இற்கும் மேற்பட்ட உணர்வுபூர்வமான வாக்காளர்கள் எங்களில் நம்பிக்கை வைத்துள்ளனர். அத்தோடு ஜனநாயக இடதுசாரி முன்னணி பெற்ற வாக்குகளையும் சேர்த்தால் மொத்தமாக ஏறத்தாழ அந்த எண்ணிக்கை 50,000 ஆக உயரும். எதிர்கால வெகுஜனப் போராட்டங்களில் முன்னணியில் திகழக் கூடியவர்கள் இவர்களே.

கலாநிதி விக்கிரமபாகு
கருணாரத்ன
தலைமைகள்குழு அங்கத்தவர்.

# எதிர்காலப் போராட்டங்களில் தமிழ் கைதிகளின் விடயம் முதன்மை பெறவேண்டும்

தமிழ் சிறைக் கைதிகளின் பாதுகாப்புக்கு ஏற்பட்டுள்ள அச்சுறுத்தல், தமிழ் மக்க-ளுக்கு மேலும் நிம்மதியை இல்லாமல் செய்துள்ளது. அண்மையில் பிந்துனு-வெவவில் இடம்பெற்ற இனவாதிகளின் மிலேச்சத்தனமான படுகொலை நட-வடிக்கையின் பின் நிலைமை மேலும் மோசமாகி உள்ளது.

புதிதாக நீதி அமைசசராகி உள்ள அமைச்சர் பட்டி வீரக்கோன் அவர்கள் விசாரணையின்றி நீண்டகாலம் இருக்கும் கைதிகளின் விசாரணையை துரிதப்-படுத்த நடவடிக்கை எடுக்கப் போகின்-றேன் என அறிவித்துள்ளார். மேலும் அமைச்சர் தமிழ் கைதிகள் உள்ள சிறை-களுக்கான பாதுகாப்புகளை பலப்படுத்-தப் போவதாகவும் அறிவித்திருக்கின்-றார். முன்பு ஒருமுறை நோர்வே உதவி மூலம் மிகப் பெரியதொரு தடுப்பு முகாம் ஒன்றை நிறுவலாம் என ஆலோசனை வழங்கி இருந்தார். மேற்படி கருத்துக்கள் இந்த நாட்டில் உள்ள வலது சாரி அரசியல் சக்திகளின் வாயில் இருந்து வந்திருந்தால் ஆச்சரியப்படத் தேவை-யில்லை. இந்த நாட்டின் தொழிலாளர் வர்க்கத்தின் உரிமைக்காகப் போராடிய ஒரு மூத்த இடதுசாரிக் கட்சியின் அமைச்-சர் கூறியிருப்பதே கவலையளிப்பதாக இருக்கிறது. யுத்தத்தை நிறுத்தி பேச்சு வார்த்தை மூலம் சமாதானத்தை ஏற்-படுத்த வேண்டும் என கோர வேண்டிய அமைச்சர், சிறைச்சாலைகளைப் பலப்-படுத்துவதில் கவனமாக இருக்கின்றார். இது இந்த நாட்டின் இடதுசாரி அரசிய-லுக்கு ஏற்பட்டுள்ள அவமானமாகும்.

விசாரணை இன்றி நீண்ட காலம் தமிழ்க் கைதிகள் சிறையில் வாடுகின்றனர். அண்மையில் விசாரணைக்கு எடுக்கப்-பட்ட வழக்குகளில் பல கைதிகள் மீது எத்தகைய குற்றமும் சுமத்தமுடியாத நிலையில் விடுதலை செய்யப்பட்டிருந்-தனர். ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பது போல மேற்படி சம்பவங்கள் தமிழ் கைதிகளின் உண்மை நிலையைப் புலப்படுத்துகிறது. ஆயிரம் குற்றவாளி-கள் விடுதலையாகலாம், ஒரு நிரபராதி தண்டிக்கப்படக்கூடாது என்பதே நீதியின் அடிப்படையாகும். இன்று இலங்கையில் விசாரணை இன்றியே பல கைதிகள் அநியாயமாகப் படுகொலை செய்யப்பட்-டுள்ளனர். கைதிகளில் பாடசாலை மாண-வர்கள், மதகுருமார்கள் குடும்பத்தர் என பல்வேறு பிரிவினர் உள்ளனர். இவர்களின் குடும்பத்தவர்கள் தமது சகோதரர்களை, தமது பிள்ளைகளை, தமது கணவனை அல்லது மனைவியை நினைத்துக் கொண்டே நடைப்பிணமாக வாழ்கின்-றனர். முன்பு இவர்களுக்கு விசாரணைக்கு பின் தமது உறவினர்கள் திரும்ப வருவார்கள் என்ற ஆறுதலில் ஆவது இருப்பார்கள். ஆனால், பிந்துனுவெவ சம்பவத்தின் பின்பு வயிற்றில் நெருப்பைக் கட்டியவர்கள் நிலை போலவே வாழ வேண்டிய சூழ்நிலையில் வாழ்கின்றனர்.

பிந்துனுவெவ சம்பவத்திற்கு முன்பே சிறைச்சாலைகளில், தமிழ் கைதிகள் மீதான தாக்குதல் சம்பவங்கள் நடை-பெற்றே வந்துள்ளன. முன்பு களுத்துறைச் சிறைச்சாலையில் இருந்த தமிழ் பெண் கைதிகள் மீதான தாக்குதலை சகலரும் அறிந்தே உள்ளனர்.

1983ம் ஆண்டு வெலிக்கடை சிறையில் தமிழ் கைதிகள் தாக்கப்பட்டு படு-கொலை செய்யப்பட்டமையை, உலகே கண்டித்திருந்தது. சந்திரிகாவின் பொது-ஜன முன்னணியினரும் இந்த சம்பவத்தை மேடை, மேடையாகப் பேசியே பதவிக்கு வந்தனர். ஆனால் பொதுஜன முன்னணி-யின் ஆட்சியில், தமிழ் கைதிகள் எங்கி-ருந்தாலும் அபாயமான நிலை தோன்றி-யுள்ளது.

அமைச்சர் பட்டி வீரக்கோன், சிறைச்-சாலைகளுக்குரிய பாதுகாப்புகளை பலப்-படுத்துவது நல்லது, அதேவேளை தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தை மதித்து அதற்குரிய தீர்வை வழங்குவதே சிறந்தது என்பதை அமைச்சர் உணர-வேண்டும். சிறைகளில் உள்ள தமிழ் கைதிகள் வசதி படைத்தவர்கள் அல்ல, நாளாந்த உழைத்து வளரும் தமிழ் குடும்பங்களின் பிள்ளைகளே இவர்கள் பெருந்தொகைப் பணம் செலவழித்து இவர்களை வெளியே எடுக்கும் நிலையில் இக்கைதிகளின் குடும்பங்கள் இல்லை. இதே நேரத்தில் அடையாள அட்டை இல்லாத காரணத்தினால் சிறைகளில் வாடும் மலையக இளைஞர்களும் உள்ள-னர். இவர்கள் கைது செய்யப்பட்டதை அறியாத பல குடும்பங்களும் உள்ளன. தமிழ் மக்களின் விடுதலைப் போராட்-டத்தை நேசிக்கும் சக்திகள், தமிழ் கைதிகள் விடயத்தில் பாராமுகமாக, இருக்க முடியாது. எதிர்காலத்தில் நடைபெற இருக்கும் போராட்டங்களில் தமிழ் கைதிகள் விடயம் முதன்மை பெற வேண்டும்.

படிப்பகம்

www.padippakam.com



# நிரந்தர புரட்சியின் வலிமை

**நிரந்தர புரட்சி** எனும் தத்துவமானது, டிரொஸ்கியினால் மார்க்ஸிச வாதத்திற்கு அளிக்கப்பட்ட ஒரு மிகச்சிறந்த புதுமையான பங்காற்றலாகும். அது எவ்வாறு உதயமாகியது. 21ம் நூற்றாண்டின் விடியலில் அதன் வலிமை யாது என்பதை பார்ப்போம்.

ருசியாவில் 1905/1906ல் புரட்சிகர கொந்தளிப்புகள் ஏற்பட்ட காலத்திலேயே நிரந்தரப் புரட்சி எனும் சிந்தனையானது முதன் முதலாக எழுந்தது. இந்த புரட்சி பற்றி டிரொட்ஸ்கி முன்வைத்த ஆய்வுக்கட்டுரையானது ருசியாவின் எதிர்காலம் பற்றி இரண்டாவது அகிலத்துக்குள் மேலோங்கியிருந்த சிந்தனையிலிருந்து முற்றாக வேறுபட்டதாயிருந்தது. ருசியப்புரட்சி மேற்கு நாடுகளில் ஒரு பாட்டாளி வர்க்கப் புரட்சிக்கான சமிக்ஞையைக் கொடுத்து இரண்டும் ஒன்றையொன்று பூரணப்படுத்துமானால் ருசியாவில் நிலவிய பொதுவுடைமை முறையானது ஒரு பொதுவுடைமை (கம்னியூச) புரட்சிக்கு இட்டுச் செல்லும் என மார்க்ஸ், எங்கல்ஸ் இருவரும் 1829ல் கூறிவந்தனர்.

எனினும் அவர்களின் மறைவுக்குப் பின் இவ்வாறான சிந்தனைப் போக்கு கைவிடப்பட்டது. ஏனெனில் அது ருசிய மாக்ஸிய வாதத்துள் (Russian populism) நெருக்கமாயிருந்ததாக சந்தேகிக்கப்பட்டிருக்கலாம். எனவே, எதிர்காலத்தில் ருசியப் புரட்சியானது முதலாளித்துவ ஜனநாயக வடிவத்தையே எடுக்கும் என்பது ருசிய மற்றும் ஐரோப்பிய மார்க்ஸிச வாதிகள் மத்தியில் ஏறத்தாழ ஒரு தேவவாக்கு ஆக இடம் பெற்றிருந்தது. ஜார்முறை ஒழிப்பு, ஜனநாயகக் குடியரசு அமைத்தல், கிராமியப்பிராந்தியங்களில் நிலப்பிரபுத்துவ எச்ச சொச்சங்களை ஒழித்தல், விவசாயிகளுக்குக் காணி பகிர்தல், இந்த அடிப்படை நிலைப்பாட்டினை எல்லா ருசிய சமூக ஜனநாயகவாதிகளும் அசைக்க முடியாத ஒன்றாக ஏற்றுக் கொண்டனர்.

1917க்கு முதலேயே தொழிலாளர் இயக்கம் தான் ருசியப் புரட்சியில் முதன்மை சக்தியாக விளங்கும் என ட்ரொஸ்கி மட்டும் தான் சிந்தித்திருந்தார். அதனை பார்வஸ், றோசா லக்சம்பேக் ஏன் ஓரளவுக்கு லெனின் கூட பகிர்ந்து கொண்டனர். மேலும் அது ஜனநாயக மற்றும் சோசலிச புரட்சியாக வளர்ச்சியடையும் எனவும் அவர் (ட்ரொஸ்கி) எண்ணியிருந்தார்.

1905ல் தான் எழுதிய எத்தனையோ புரட்சிகர கட்டுரைகளில் தான் அவர் இந்த (நிரந்தர புரட்சி) எனும் சித்தாந்தத்தினை சிருஷ்டித்தார். அவை பின்பு 1906ல் பெறுபேறுகளும் எதிர்பார்ப்புகளும் (Results and prospects) எனும் நூல் வடிவம் பெற்றன. இவ்விடயத்தில் ட்ரொஸ்கி மீது, பார்வஸ் நிச்சயமாக செல்வாக்கு செலுத்தியிருந்தார். ஆனால் பார்வஸின் எண்ணியிருந்ததாவது தொழிலாளர் அரசாங்கம் முதலாளித்துவ ஜனநாயகத்தை மட்டுமே உருவாக்கும் என்பதாகும். பிரான்ஸ் மேரிங் என்ற ஜேர்மனிய சோசலிச எழுத்தாளரிடமிருந்து தான் ட்ரொஸ்கி நிரந்தர புரட்சி என்னும் பதத்தினையே பெற்றிருந்த போதும் அவர் அதனை அதிகளவு கூர்மையானதாய் ஆக்கிவிட்டார். ட்ரொஸ்கி மட்டுமே ருசியாவில் ஒரு சோசலிசப் புரட்சியினை (பெரிய முதலாளிகளை பறிமுதல் செய்து) நிறைவேற்றவும் என கூறிவந்தார். இது ஒரு கற்பனாவாத சாபமென ஏனைய ருசிய மார்க்ஸிசவாதிகள் ஏகமனதாக நிராகரித்தனர். ட்ரொஸ்கி மார்க்ஸிசத்தையும் இயங்கியல் முறையினையும் நன்கு தெளிந்து அரசியல் உறுதி கொண்டு இரண்டாவது அகிலத்தில் நிலவியிருந்த பழைமைப் போக்கினை தகர்த்தெறியக் காரணம் லபிறியோலா (முதலாவது மார்க்ஸிச தத்துவவாதி) அவர் மீது செலுத்திய செல்வாக்கு ஆகும். அப்போது கோலோச்சிக் கொண்டிருந்த கொச்சையான தர்க்க முறைக்கும் பொருள் முதல் வாதத்துக்கும் முற்றிலும் வேறுபட்டிருந்தது.

ட்ரொஸ்கியின் பல்வேறு படைப்புகளிலும், ருசிய புரட்சி வரலாறு எனும் நூலும் காணப்படும். அவரின் தெளிவான மார்க்ஸிச குணாம்சங்கள் சில வருமாறு :

(1) எதிரானவற்றின் ஒற்றுமை – எனும் இயங்கியல் கோட்பாட்டினை அனுசரித்தல் பொல்செவித் பிரிவினர் கடைப்பிடித்த இறுக்கமான போக்கினையும், மென்செவிக் பிரிவினர் பின்பற்றிய காத்திரமற்ற இயங்கியல் குறைந்த போக்கினையும் அவர் விமர்சித்தார், கண்டித்தார்.

(2) மினெக்கானொவ் அறிமுகப்படுத்திய மார்க்ஸிச வாதத்தில் காணப்பட்ட பொருளாதார வாதத்தினை ட்ரொஸ்கி வெளிப்படையாகவே நிராகரித்தார். இதுதான் நிரந்தரபுரட்சி கோட்பாட்டின் அடிப்படை நடைமுறையாக அமைந்தது.

(3) வரலாறென்பது தலைவிதி என்பதல்ல. வளர்ச்சியடைந்துவரும் புரட்சியின் உள்ளார்ந்த அசைவுகளை ஆராய்ந்து எய்தக்கூடிய பலாபலன்களைக் கண்டு பிடிப்பதே மார்க்ஸிச வாதிகளின் கடமையாகும். நிரந்தரப் புரட்சி என்பது முன்கூட்டித் தீர்மானிக்கப்படும் விடயமல்ல. அது யதார்த்த ரீதியானது. நடைமுறைச் சாத்தியமானது. அதனை ஈட்டுவதானது எத்தனையோ உள்ளீடுகளிலும் எதிர்வு கூற முடியாத விடயங்களிலும் தங்கியுள்ளது.

(4) மேற்கு ஐரோப்பிய பொருளாதார அபிவிருத்தியும் ருசிய சமூக இயக்கமும் ஒத்த தன்மையற்றவை என்பதை உறுதிப்படுத்துவதற்கு, நரோட்னிய மக்கள் வாதத்தினையும், மென்செவிக்குகளின் திட்டவட்டமற்ற போக்கினையும் விமர்சித்ததுடன், ட்ரொஸ்கி ருசிய சமூக அமைப்பின் தனித்துவத் தன்மையையும் நாட்டின் முதலாளித்துவ வளர்ச்சியின் தாக்கத்தையும் எடுத்துக் காட்டுவதற்கு ட்ரொஸ்கி ஒரு காத்திரமான ஆய்வினை உருவாக்கினார்.

## தனித்துவம்

இவ்வாறான புதிய வழிமுறைகள் மூலமே, விவசாயிகளின் ஆதரவுடனான தொழிலாளி வர்க்கம் மட்டும் தான் ஏதேச்சிகாரத்தையும் நில உரிமையாளரின் பலத்தையும் முறியடித்து ஒரு ஜனநாயப் புரட்சியினை நிறைவேற்றும் என்ற முடிவுக்கு ட்ரொஸ்கி வந்தார். ட்ரொஸ்கியின் தீர்க்கமான பங்களிப்பு யாதெனில் ருசியப்புரட்சியானது ஒரு ஆழ்ந்த ஜனநாயக மாற்றத்தினை ஏற்படுத்துவதற்கு அப்பால் தெளிந்த சோசலிச உள்ளீட்டுடனான முதலாளித்துவ விரோத நிலைக்குச் செல்லும் என எடுத்துக் காட்டியதாகும்.

தொழிலாளி வர்க்கத்தின் அரசியல் ஆதிக்கமும் அதன் பொருளாதார அடிமைத்தனமும் ஒவ்வாதவை என்பதே ட்ரொஸ்கியின் பிரதான வாதமாகும். ஆனால் புரட்சியானது மேற்கு ஐரோப்பாவுக்கு பரவாவிட்டால் ருசிய தொழிலாளி வர்க்கம் நீண்ட காலத்திற்கு ஆட்சி அதிகாரத்தினைத் தக்க வைக்க முடியாது என முழுமையாக எண்ணியிருந்தார்.

ருசியாவில் முதலாளித்துவ கட்சிகளும் அவற்றின் மென்மையான தொழிலாளி இயக்க நண்பர்களும் விவசாயிகளின் புரட்சிகர அபிலாசைகளுக்கோ, சமாதானத்தை விரும்பிய மக்களுக்கோ வழிகாட்ட முடியாமையால், 1917 மாசி முதல் ஐப்பசி வரை புரட்சிகர இயக்கம் தீவிரமடைந்தது. சோவியத் சபைகள் வெற்றியடைந்த பின்னர் தான் விவசாயிகளைப் பொறுத்தவரையிலான ஜனநாயகப் பணிகள் நிறைவேற்றப்பட்டன.

ஆனால் பதவிக்கு வந்தபின் புரட்சியினை ஜனநாயக பணிகளுக்கு மட்டுப்படுத்த முடியவில்லை. அங்கே நிலவிய வர்த்தகப் போராட்டத்தின் தாக்கம் ஆனது எதிர்பார்த்ததைவிட வேளையோடு மூலதனத்தை ஆட்கொள்ள வேண்டிய நிலைக்கு இட்டுச் சென்றது. எனவே தான் 1918ல் பிரதான கைத்தொழிற் துறைகள் சமூகமயமாக்கப்பட்டன.

முதலாளித்து ஜனநாயக நிலையிலிருந்து பாட்டாளி வர்க்க புரட்சியாக தொடர்ச்சியாக நகர்ந்து கொண்டிருந்தது. சோசலிசத்தை நோக்கிய முதலாளித்துவ விரோதப் பாதை திறபட்டது. 1917 சித்திரையில் லெனின் முன் வைத்த தீவிரமான கேந்திர மாற்றுத் திட்டம் தான் உலகத்தை குலுக்கிய நிகழ்வு இடம் பெற்றது. இத்திட்டமானது நிரந்தரப் புரட்சிக் கோட்பாட்டுக்கு கிட்டுமானதாயிருந்தது.

மேற்கு ஐரோப்பாவில் புரட்சி வெற்றியடையாத நிலையில் ருசியாவில் (1991 வரை) முதலாளித்துவம் மீண்டதில்லை. ஆனால் தொழிலாளி வர்க்கத்திலிருந்து கிளை விட்டதாகிய அதிகார வர்க்கம் ஆட்சியைத் தனதாக்கிக் கொண்டது.

1928ல் நிரந்தரப்புரட்சி எனும் நூலில் முதல் தடவையாக ட்ரொஸ்கி குடியேற்ற நாடுகளிலான சமூகப் புரட்சியின் வேகத்தினைச் சுட்டிக் காட்டியிருந்தார். சீன கம்னியூஸ்டுகள் மீது ஸ்டலின்வாத ஆபத்தான 2 கட்ட புரட்சிக் கோட்பாட்டுக்கெதிரானதாக அது அமைந்தது. தேசிய முதலாளித்துவ சக்திகளை இணைந்து முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சியை முன்னெடுப்பதென்பது அதன் முக்கிய அம்சமாயிருந்தது.

நிரந்தரப்புரட்சி என்பதன் அத்திவாரமாக சம நிலையற்ற ஒருங்கிணைக்கப்பட்ட அபிவிருத்தி வடிவமே அமைந்திருந்தது. வரலாற்று நிகழ்வுகள் இயங்கியல் ரீதியாக ஆராயப்பட்டு பல்வேறு கட்டங்களை இணைத்து பழையனவற்றையும், புதிய நவீனமயமானவற்றையும் ஒன்று சேர்த்து கணிக்கப்பட வேண்டும். இதனூடாக குறிப்பாக 3வது உலக முதலாளித்துவ நாடுகளில் தீர்க்கப்படாமலிருக்கும் ஜனநாயக காரியங்கள் விடாப்பிடியாக முன்னெடுத்துச் செல்லப்படும். தொழிலாளி வர்க்கம் விவசாயிகளின் ஆதரவுடன் ஆட்சியைக் கைப்பற்றியதும் ஜனநாயகப் புரட்சியாக ஆரம்பித்து, காலப்போக்கில் அதன் வளர்ச்சிக் கட்டமாகவே சோசலிசப் புரட்சியாக மாற்றம் பெற்றுச் செல்லும். இதுதான் நிரந்தர புரட்சியின் செயல் வடிவம் ஆகும்.

ஸ்டாலின்வாதிகளின் 2 கட்டப்புரட்சி என்பது தேசிய முதலாளித்துவவாதிகளுடன் கூட்டுச் சேர்வதும் (முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சி என்ற போர்வையில்) ஆபத்தானது என்பதை 1936ல் ஸ்பெயினில் 1965ல் இந்தோனேசியாவில் மற்றும் 1937ல் சிலியிலும் காணக்கூடியதாயிருந்தது.

அடுத்ததாக ஒரு நாட்டில் சோசலிசம் எனும் ஸ்டலினிசவாதம் தப்பிப்பிழைக்க முடியாது என்பது வரலாற்று ரீதியாக சந்தேகத்துக்கப்பால் நிரூபிக்கப்பட்டுள்ளது. 1991ல் சோவியத் ஒன்றியம் பரிதாபமாக வீழ்ச்சி பெற்றமை இதற்கு மிகப்பெரிய உதாரணமாகும். சோசலிசம் என்பது உலகளாவிய ரீதியில் இடையறாது செயலுருப் பெற்றால் மட்டுமே நிலைத்து நிற்கும். அதுதான் நிரந்தரப் புரட்சியின் குணாம்சமாகும். இது 21ம் நூற்றாண்டில் மேலும் வலிமையானதாகக் கருதப்பட வேண்டும். பல 3வது உலக நாடுகளில் உண்மையான ஜனநாயகப் புரட்சி முற்றுப் பெறவில்லை. அங்கே அரசானது ஜனநாயகப் படுத்தவோ, மத சார்பற்றதாகவோ ஆக்கப்படவில்லை. முன்னைய காலத்தை விட கொடூரமான ஆதிக்க நிலைமைகள் தோன்றியதற்கான அதாவது சர்வசே நாணய நிதியம், உலக வங்கி, உலக வர்த்தக ஸ்தாபனம் மூன்றினதும் சர்வாதிகாரம் கழுத்தைச் சுற்றிப் போடப்பட்ட கயிறு என்று சொன்னால் அது மிகையல்ல. மேற்படி நிலவளங்கள் ஏகாதிபத்திய நாடுகளின் குறிப்பாக ஐக்கிய அமெரிக்காவின் நலன் காக்க உருவாக்கப்பட்டவை என்பதை யாரும் மறந்து போகக் கூடாது.

இன்றைய கால கட்டத்தில் புரட்சி என்பது முற்றிலும் தொழிலாளர் புரட்சி என்பதற்கில்லை. அவ்வவ் நாடுகளில் இடம் பெற்று வரும் விவசாயங்கள் மற்றும் சிறுபான்மை இனத்தவரின் போராட்டங்கள் சோசலிசப் புரட்சிக்கு இன்றியமையாதவை ஆகும். மெக்சிக்கோவில் இடம்பெறும் "சப்பாற்றஸ்டா" (FZLN) போராட்டம், ஏன் இலங்கையில் இடம் பெற்றுக் கொண்டிருக்கும் தமிழ் தேசிய இன விடுதலைப் போராட்டம், விவசாயிகள் போராட்டம் உதாரணங்கள் ஆகும்.

3வது உலக நாடுகளில் ஏன் முன்னாள் சோவியத் ஒன்றியம் மற்றும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் கூட, தேசிய இனப்பிரச்சினையும், புதிய ஆபத்தான வடிவங்களை எடுத்து வருகின்றது. அதாவது அநேகமாக பாசிச பாணியிலான சக்திகளால் தூபமிடப்படும் இன, மத ரீதியான கொந்தளிப்புக்கள் மேலோங்கி வருகின்றன. இவை மேற்கத்திய ஏகாதிபத்தியவாதிகளால் ஏவப்பட்டவையாகவோ ஏவப்படாதவையாகவோ இருக்கலாம். அங்கேயும் ஒரு சோசலிச நோக்கிலான தீர்வுதான் கொலைகள் சக்கரம் போல் தொடர்வதையும் எதிர்த் தாக்குதல்களையும் சமூக பொறுப்புணர்வலைகளையும் நிறுத்துவதற்கு உதவும். இத்தகைய தீர்வில் உண்மையான ஜனநாயக சமஷ்டியாட்சி முறை அல்லது கூட்டாட்சி முறை மேற்கொள்ளப்படலாம். இவ்வாறாகவே சிறுபான்மையினங்களின் தேசிய உரிமைகளை வலுப்படுத்தவும் எல்லாத் தேசியங்களின், தொழிலாளர்கள் மத்தியில் ஒற்றுமையை உருவாக்கவும் முடியும்.

3வது உலக (அல்லது தெற்கு) நாடுகளில் ஒரு உண்மையான சோசலிச ஜனநாயகப் புரட்சி நிரந்தர நிகழ்வாக இடம் பெறாமலிருந்தால் அங்கே நிலவக் கூடிய வறுமை, துயரம், வேலைவாய்ப்பின்மை, பாரதூரமான சமூக ஏற்றத்தாழ்வுகள் இனத்துவ பராபட்சங்கள் ஏகாதிபத்திய ஆதிக்கம் மற்றும் இன்னோரன்ன பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பது அரிது.

படிப்பகம்

www.padippakam.com



# குரல்வளை நசிக்கப்பட்ட மலையகத் தேசிய எழுச்சி

**மலையகத்தின்** அரசியல் எழுச்சிகள் யாவும் காலத்துக்குக் காலம் வெறும் தொழிற்சங்கப் போராட்டங்களாகவும் வன்முறைகளாகவும் சித்திரிக்கப்பட்டு நசுக்கப்பட்டு வந்துள்ளன. இந்நாட்டின் குடிமக்களுக்கு இருக்கக்கூடிய சராசரி ஜனநாயக உரிமைகள் அனைத்தையும் தட்டிப் பறிக்கும் வகையிலேயே சம்பவங்கள் நடந்தேறுகின்றன. தேர்தல் காலங்களில் வாக்களிப்பதற்கான உரிமையைப் பறிப்பதில் ஈடுபடும் பெரும் தேசியக் கட்சிகள் மறுபுறம் அம்மக்களுக்கு அரசியல் உரிமைகளை தாமே வழங்கியுள்ளோம் என ஒருவர் மாறி ஒருவராக முழக்கமிடவும் செய்கின்றனர்.

மலையகத் தேசத்தின் சகல எழுச்சிமிக்க தருணங்களும் இரத்தத்தால் மூழ்கடிக்கப்பட்டுள்ளன. அவர்கள் தம் உணர்வுகளை வெளிப்படுத்துவதற்கான ஆகக் குறைந்தபட்ச மார்க்கங்களும் இல்லை என்றாகிறது.

1940களில் வீறு கொண்டெழுந்த மலையகத் தொழிற்சங்கங்களில் இலட்சக்கணக்கான தொழிலாளரை போர்க்குணத்துடன் வழி நடத்திய தொழிற்சங்கத் தலைமைகள் இன்று எழுச்சியுறும் தொழிலாளர்களை காட்டிக் கொடுக்கவும் போராட்டங்களை நசுக்கி விடவுமே முன்னிற்கின்றன. காலத்துக்குதவாத முழக்கங்களின் காரணமாக பாரம்பரிய தொழிற்சங்கத் தலைமைகள் தூக்கியெறியப்பட்டு வருகின்றன.

1977ம் ஆண்டு சிறிமாவோ அரசாங்கத்தின் அரசியல் கயமைத்தனம் காரணமாக அனுர பண்டாரநாயக்க 7000 ஏக்கர் தோட்டக் காணிகளை சிங்கள குடியேற்றங்களுக்காக சுவீகரிக்க முயன்றபோது வெடித்துக் கிளம்பிய மலையகம் தழுவிய பெரும் எழுச்சிமிக்க எதிர்ப்பலைகள் அன்றைய ஐக்கிய முன்னணி அரசினால் இரும்புக்கரம் கொண்டு நசுக்கப்பட்டன. சிவனு இலட்சுமணனை மலையகம் காணிக்கையாக்கியது.

1986ம் ஆண்டில் நடைபெற்ற இரண்டாவது தேசியப் பேரெழுச்சியில் மலையகம் இறங்கியபோது இரும்புக்கரம் கொண்டு நசுக்க முயன்ற ஜே.ஆர் அரசையும் எழுச்சிகொண்டு திரண்டு வந்த மக்கள் பெருந் திரளையும் திரு.சௌ.தொண்டமான் ஒருங்கே எதிர் கொண்டார். பேரெழுச்சி நசுக்கப்பட்டதாயினும் அவ் எழுச்சிக்குரிய விலையை மலையகம் செலுத்தியது.

இத்தடவை பண்டாரவளை பிந்துனுவேவ புனர்வாழ்வு முகாம் படுகொலை மலையகத்தில் ஏற்படுத்திய ஆத்திரம் கலந்த பேரெழுச்சி பொலிஸ் இராணுவ குண்டர்களின் ஆத்திரமூட்டலால் மிகக் கடுமையான விளைவுகளுக்கு இட்டுச் சென்றுள்ளது.

இத்தடவை இ.தொ.கா தலைமை பகிரங்கமாகவே காட்டிக் கொடுப்பில் இறங்கியது. இவ்வெழுச்சியில் சம்பந்தப்பட்டவர்கள் யாராயினும் அவர்களைத் தண்டிக்க வேண்டும், காட்டிக் கொடுக்கத் தயார் என பகிரங்கமாக அறிவித்துள்ளனர்.

பண்டாரவளைப் படுகொலைகளை அரசின் பிரதிநிதியாக சென்று விநோதமாகப் பார்த்து வந்த ஆறுமுகம் தொண்டமான் மலையகத்தின் பேரெழுச்சியைத் தொடர்ந்து மலையகத் தமிழரை பேரினவாதப் பெருந்தீயில் கருக விட்டு விட்டுத் ஓடிப்போயுள்ளனர். மக்கள் நெருக்கடியில் இருக்கிறார்கள் பேரெழுச்சி நசுக்கப்பட்டது. இளைஞர்கள் கைது செய்யப்பட்டு அவசரகாலச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்படுகின்றனர். ஆனால் ஒட்டுப் பொறுக்க வரும் துரோகிகளைக் காணவில்லை. மக்களிடம் சில்லறையாகப் பிச்சை கேட்டும் கொள்ளையடித்தும் பாராளுமன்றப் பதவிகளை தட்டிக் கொண்ட மக்கள் துரோகிகள் ஓடி ஒழிகிறார்கள். காட்டிக் கொடுக்கத் தயாராகிறார்கள்.

அரசியல் எழுச்சி ஒன்றில் இறங்கியமைக்காக கைது செய்யப்படும் இளைஞரை அவசரகால சட்டத்தின் கீழ் தடுத்து வைக்க முயல்கிறது அரசு. மிக மோசமான மனித உரிமை மீறல்கள் இடம் பெற்றுள்ளன. 13 பேர் சுட்டும் வெட்டியும் கொல்லப்பட்டுள்ளனர். நூற்றுக்கும் அதிகமானோர் கைதாகியுள்ளனர். 80 பேரளவில் படுகாயப்படுத்தப்பட்டுள்ளனர். இரண்டு சின்னஞ் சிறுமிகள் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். ஆனால் அரசுடன் கூடிக் குழவும் இ.தொ. காவும், எதிரணியுடன் சயனிக்கும் ம.ம.முவும், தமிழ்க் கட்சிகளும் மலையக தேசத்தை கறுவறுக்கத் துணை போகின்றன. பயங்கரவாத சட்டத்தில் படுத்து அவசரகாலச் சட்டத்தை ஆதரித்தும், நடுநிலை வகுத்தும் முண்டு கொடுக்கின்றன.

மலையகம் மீண்டும் ஒரு தடவை முக்காடிட வேண்டியிருக்கிறது. அகதிகளாக்கப்பட்டோர் பலவந்தமாக விரட்டப்பட்டுள்ளனர்.

காடைத்தனங்களை கட்டவிழ்த்து விட்ட இராணுவமும் பொலிசாரும் அரசியல் செல்வாக்கு மிக்க துறவிகளும் காடையர்களும் சீண்டப்படவுமில்லை.

ஆக, இந்நாட்டில் மலையகத் தமிழர் சமாதானமான வழிகளில் தம் இருத்தலுக்கும் வாழ்தலுக்குமாகப் போராட முடியாதென்றாகின்றது. கிட்டிய எதிர்காலத்தில் மலையகம் தம்மீதான ஒடுக்குமுறைகளை எதிர்த்து குரல் தர முடியாதவாறு குரல்வளை நெரிக்கப்பட்டு வருகிறது.

இ.தொ.காவும், ம.ம.முவும் ஒருவர் மாறி ஒருவர் இளைஞர்களை கைது செய்வதற்குத் துணை போகின்றன. ஒருபடி மேலே போய் சிறைப்பட்டு மீண்ட ம.ம.மு தலைமை பட்டியல்படி தாமே இளைஞர்களை கைது செய்ய உதவுவதாகவும் கைது செய்யப்படுவோருக்கு குற்றவியல் சட்டங்களின் கீழேயே வழக்குத் தொடர வேண்டும் எனவும் கோரியுள்ளனர்.

ஆக, அரசியல் கைதிகள் தமக்குரிய அரசியல் அந்தஸ்துடன் நிபந்தனையின்றி விடுவிக்கப்படுவதே தற்போதைய தேவையாகிறது. மாறாக இவர்களை கிரிமினல்களாக சட்டத்தின் முன் நிறுத்துவது என்பது தாய்ச்சியில் இருந்து நெருப்பில் வீழ்த்துவதற்கு ஒப்பானதாகும்.


மலையகத் தலைமைகளின் இத்துரோகச் செயற்பாடுகள் அவர்களும் கூட மக்களின் பேரெழுச்சிகளை நசுக்கிடவும் தமக்குச் சாதகமான போது மட்டும் கடுமையான போர்க்குரலை எழுப்பி மக்களை தூண்டி விட்டு விட்டு குளிர்காயவும் முயல்வது துயரமாகின்றது.

மலையக தேசம் இன்னொரு எழுச்சியையும் அலங்கோலமாகப் பறிகொடுத்திருக்கிறது. இப்பேரெழுச்சியை நசுக்குவதில் அரச இயந்திரமும், பேரினவாதச் சக்திகளும் மட்டுமன்றி மலையக தலைமைகளும் கூடவே துணை நிற்கின்றன. மக்கள் இனியும் தாமாக எழுச்சிகளை தொடங்க முடியாதவாறு நசுக்கிவிட முயலும் அரசுக்கு துணை போவதானது இனியொருபோதும் இந்தத் துரோக சக்திகள் மக்களிடம் விலைபோக முடியாது என்பதையும் சுட்டி நிற்கிறது.

எழுச்சிமிகு போராட்டத்தில் இறங்கியதால் நசுக்கப்பட்டுள்ளவர்களை மீட்டெடுக்கும் அரசியல் அழுத்தங்களை கொடுப்பதை விடுத்து எழுச்சியையே நடுக்கி விடவும் தாமே முன்னின்று காட்டிக் கொடுக்கவும் துணை போவதும், தனிநபர், அரசியல் நலன்களுக்காகவேயாகும்.

இத்துரோகத்தனமிக்க அரசியல் சக்திகள் இனியும் மக்களை போராட்டங்களுக்கழைக்கும் அனைத்துத் தார்மீக உரிமைகளையும் இழந்திருக்கின்றன.

இவ்வெழுச்சியின் குரல்வளை நசுக்கப்படுவதை தடுத்து நிறுத்த பெரும்பான்மை சமூகத்தின் முன்னணி இயங்கு சக்திகளும் ஒடுக்கப்பட்ட தேசப் பிரிவுகளும் சண்டமாருதமாய் எழுவதே நாளைய நம்பிக்கைகளுக்கு கரம் கொடுப்பதாக இருக்கும்.



பிந்துனுவெவ படுகொலைச் சம்பவத்தைக் கண்டித்து கலாநிதி விக்கிரமபாகு தலைமையில் புதிய இடதுசாரி முன்னணியினர் நடத்திய மறியல் போராட்டம்

# பேரினவாத கட்சிகளை ஆதரிப்பதை நிறுத்துவோம்

**எமது** ஆத்திரத்தை, எமது துயரத்தை, எமது இழப்புகளை எண்ணி, உடனடியாக தண்டிக்க வேண்டுமா என்ற எண்ணத்தில் ஏதாவது ஒரு பேரினவாதக் கட்சியை ஆதரிப்பதாலே அது சாத்தியப்படும் என நினைத்து வாக்களித்து வந்தோம். ஆனால், நடந்தது என்ன! பேரினவாதிகள் தமிழ் மக்களின் முதுகில் சவாரி விட்ட கதையே வரலாறு முழுவதும் உள்ளது.

1970ல் தமிழ் அரசுக் கட்சியை ஐக்கிய தேசியக் கட்சியினர் ஏமாற்றினர் என்ற ஆத்திரத்தில் தமிழ் வாக்குகள் யாவும் சிறிலங்கா சுதந்திரக் கட்சி கூட்டணிக்குச் சென்றது. 2/3 பெரும்பான்மையுடன் பதவிக்கு வந்த சிறிமாவோ பண்டாரநாயக்கா நடத்திய காட்டுத்தர்பார் ஆட்சி நாமறிந்த விடயமாகும். தமிழ் இளைஞர். மனதில் தீவிரவாதம் குடிபுகவும், ஆயுத மோகம் தோற்றம் பெறவும் வழி சமைத்தவர் சிறிமா.

1977ல் ஜே. ஆரின் நயவஞ்சக மொழிகளில் நம்பிக்கை வைத்த தமிழ் மக்கள் தமது வாக்குகளை அவருக்கு வாரி வழங்கினர். ஜே. ஆரின் 17 வருடகால ஆட்சியில் தமிழ் மக்கள் அனுபவித்ததை மறக்க முடியாத கதையாகி விட்டது. ஜே. ஆரின் கொடுமைக்கு எதிராக பல்வேறு போராட்டங்கள் நடைபெற்றன. இப் போராட்டங்களுக்கும் சந்திரிக்காவுக்கும் எத்தகைய தொடர்பும் இருக்கவில்லை. இருந்த போதும் 1994 ல் 62% வாக்குகளைப் பெற்று சந்திரிகா பதவிக்கு வந்தார். சந்திரிகா பெற்ற வாக்குகளில் தமிழ் மக்களின் வாக்குகள் அதிகமாக அடங்கியிருந்தது. பின்பு சந்திரிகாவின் கொடுமைகளை தாங்க முடியாது கடந்த ஜனாதிபதித் தேர்தலிலும், நடைபெற்று முடிந்த 11வது நாடாளுமன்ற தேர்தலிலும் தமிழ் மக்கள் ஐக்கிய தேசியக் கட்சிக்கு வாக்களித்துள்ளனர்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர்களுள் விலாங்கு போன்றவர் ரணில் விக்கிரமசிங்கா. இவர் இனவாதிகளுக்கு இனவாதியாகவும், தமிழ் மக்களுக்கு தமிழ் தேசியவாதியாகவும் காட்சி தருகிறார். அண்மையில் நோர்வே நாட்டு பிரதிநிதி சமாதான நடவடிக்கையில் ஈடுபட்டுச் சென்ற பின்பு, ரணில் விக்கிரமசிங்கா வினோதமான அறிக்கை ஒன்றை விட்டுள்ளார். அதாவது, பாராளுமன்றத்தில் உள்ள தமிழ் கட்சிகளுடன் முதலில் கலந்துரையாடிய பின்பே அடுத்த நகர்வை ஆரம்பிக்க வேண்டும் என்பதே அதுவாகும். பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் தமிழ் கட்சிகள் முதலில் விடுதலைப் புலிகளுடன் பேசினால் போதும் என்று ஓங்கிக் குரல் கொடுத்து வருகின்றன.

இன்று தமிழ் மக்களின் பிரச்சினையில் முக்கிய விடயங்கள் தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சியே பிரதான தடைக்கல்லாக உள்ளது. காணி விடயம் தொடர்பாக காணி அதிகாரம் மத்திய அரசிடம் இருக்க வேண்டும் என்பதே ஐக்கிய தேசியக் கட்சியின் நிலைப்பாடாகும். நாடு பிராந்தியமாக பிரியக்கூடாது என்பதிலும் ஐக்கிய தேசியக் கட்சி மிக இறுக்கமாகவே இருந்து வருகிறது. மேற்கூறிய இரண்டு விடயங்களுமே தமிழ் ஈழ விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசுக்கும் இடையே நடைபெற இருக்கும் பேச்சு வார்த்தையின் அடிநாதமாக உள்ளது. இதற்கு ஐக்கிய தேசியக் கட்சி எதிராகவே இருக்கிறது. உலகத்தின் கண்களிலும், மண்ணைத் தூவும் தமிழ் மக்களின் மனதில் மயக்கத்தை ஏற்படுத்தவும் ஐக்கிய தேசியக் கட்சி ஜெயலத் ஜெயவர்த்தனாவை வன்னிக்கு அனுப்பி வருகிறது. ஜெயலத் ஜெயவர்த்தனா வன்னிக்குச் சென்று சில சுகாதார நடவடிக்கைகளை செய்வது என்பது ஐக்கிய தேசியக் கட்சியின் புறுடாக்களில் ஒன்றாகும்.

இம்முறை வடபகுதியில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு வாக்குகளை பெற்று கொடுப்பதற்காக தமிழ் மக்களின் உயர் வகுப்பினர் திரை மறைவில் கடுமையாக உழைத்துள்ளனர். இதயம் அற்ற அவர்களால் துன்பப்படப் போவது, நொந்து போய் இருக்கும் தமிழ் சமுதாயமே. எம்மிடம் இருக்கும் ஆத்திரத்தை உடனே தீர்க்க வேண்டும் என்பதற்கு ஒரு கட்சிக்கு வாக்களிக்க வேண்டும் என இவர் கூறுவது எவ்வளவு கொடுமையானது என்பதை தமிழ் மக்கள் எதிர்காலத்தில் உணர வேண்டும்.

தமிழ் மக்களை வாட்டி வதைக்கும் அவசர காலச்சட்டத்துக்கு எதிர்த்து வாக்களிக்கக்கூடாது என ரணில் விக்கிரமசிங்க உத்தரவிட்டுள்ளாளர். இதன் மூலம் ரணில் விக்கிரமசிங்கவின் உண்மைநிலை அம்பலத்துககு வந்துள்ளது. வரலாற்றில் என்றுமில்லாதவாறு தமிழ் மக்களின் வாக்குகளை ஐக்கிய தேசியக் கட்சிக்கு பறித்துக் கொடுப்பதில், மனோகணேசன், சந்திரசேகரன் போன்றோர் முன் நின்று உழைத்தனர். அரைமந்திரியில் இருந்து முழுமந்திரி கிடைக்காமல் வெளியேறிய தலைவர் சந்திரசேகரன். தனது வர்த்தக நடவடிக்கைக்காக இடதுசாரி கவசம் தரித்தவர் மனோ கணேசன். இவர்களின் குறுகிய ஆசைக்காக தமிழ் மக்களின் விடுதலையையே திசை திருப்பியுள்ளனர்.

பிந்துனுவெவ சம்பவத்தில் கைது செய்யப்பட்ட சந்திரசேகரனுக்காக ஐக்கிய தேசியக் கட்சி என்ன நடவடிக்கை எடுத்தது. சட்டத்தையும், ஒழுங்கையும் நிலை நாட்டுமாறு பாதுகாப்பு படையினருக்கு வேண்டுகோள் விடுத்ததே இக்கட்சி செய்த பிரதான வேலையாக இருந்தது. தலவாக்கலையில் எரிக்கப்பட்ட தமிழர்களின் கடைகள் தொடர்பாகவோ, பாதிக்கப்பட்ட மலையக மக்களுக்காகவோ இவர்கள் எத்தகைய நடவடிக்கைகளிலும் ஈடுபடவில்லை. ஒரு சிறு போராட்டத்தைக் கூட நடத்தவில்லை.

இன்றும் மலையகத்தில் அமைக்கப்பட்டு இருக்கும் இராணுவ முகாம்களுக்கு ஆதரவாகவே ஐக்கிய தேசியக் கட்சி உள்ளது.

1910 காலப் பகுதியில் உருவாகிய தொழிற்கட்சியே ஆசிய நாடுகளுக்கு சுதந்திரத்தை வழங்கியுள்ளது. அதுபோல தென் இலங்கையில் உள்ள முற்போக்குத் தன்மை கொண்ட பல அமைப்புகள் உள்ளன. இப்பேரினவாதக் கட்சிகளுடன் ஒப்பிடுகையில் தனது சிறிய கையாக இருக்கலாம். ஆனால் அத்தகைய சக்திகள் வலிமை பெற்றலே தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்திற்கு நியாயம் கிடைக்கும்.

எனவே எதிர்காலத்தில் தென் இலங்கை முற்போக்கு சக்திகளை வலிமை பெறச் செய்வது, தமிழ் மக்களின் கரங்களிலேயே உள்ளது. அதைச் செய்வதன் மூலமே தமிழ் மக்கள் தமது விடுதலையைப் பெற முடியும்.

www.padippakam.com





# கல்யாணத்துக்குத் தாலியா நான்சென்ஸ்!

**கல்யாணமா?** தாலியா? இதெல்லாம் என்ன செண்டிமென்ட்? இவை இல்லாமலேயே இணைந்து வாழலாம் என்று கிட்டத்தட்ட பத்து வருடங்களாக வெற்றிகரமாக வாழ்ந்து கொண்டிருக்கும் தம்பதிகள் பிரிட்டோ-சுதா. காதலாகி, கைப்பிடித்து கல்யாணம் தாலி இல்லாமல் ஏழு வயது மகனுக்கும் பெற்றோர் ஆகியிருக்கிறார்கள் இந்தப் புதுமை ஜோடி.

"எங்கள் காதல் கூட என் அன்பு காதலிக்கு..... என்று தொடங்கி.... என்றும் அன்புடன் என்று முடியும் சராசாரி லவ் லெட்டர் காதல் தான்....." என்று தொடங்கினார் பிரிட்டோ.

பிரிட்டோவின் சொந்த ஊர் திருத்துறைப் பூண்டி. சுதாவுக்கு நாகப்பட்டினம். இருவருமே நடுத்தரக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். இருவருக்கும் காதலிக்கும் வயதில் அறிமுகம் ஏற்பட்டது. காவிரிக்கரையோர இலக்கியக் கூட்டங்களில் தான்.

"எங்கள் காதல் செடிக்குத் தண்ணீர் ஊற்றியது இலக்கியம் என்று கூடச் சொல்லலாம். ஆமாம், நாங்கள் முதன் முதலாகச் சந்தித்தது கூட ஒரு இலக்கியக் கூட்டத்தில்தான். அடுத்தடுத்த சந்திப்புகளும் இதே மாதிரியான இடங்களில் அடுத்து என்ன? கடிதத் தொடர்பு. அதில் கூட இலக்கிய விவாதங்கள் தான். பஸ்ஸில் பயணித்துக் கொண்டிருக்கும் போதே, புரியாத இசங்கள் பற்றி மூன்று மணிநேரம் பேசிக் கொணடிருப்போம்" என்று மலரும் நினைவுகளைச் சொல்லிச் சிரிக்கிறார் பிரிட்டோ.

சுதாவின் குடும்பம் மிகுந்த ஆச்சாரமுள்ள பிராமணக் குடும்பம். இலக்கியம், ஆண் நண்பர்கள் என எல்லாவற்றுக்கும் எதிர்ப்புத் தெரிவிக்கும் குடும்பம். இருந்தும் அவருக்கு பிரிட்டோ மீது ஒரு ஈடுபாடு வந்துவிட்டது. அப்போது இவர்கள் ஒருவருக்கொருவர் காதலை வெளிப்படுத்தவில்லை. நட்பு என்கிற இனிய போர்வையில் பழகிக் கொண்டிருந்தார்கள். அந்தப் போர்வையை விலக்க இருவருக்குமே தயக்கம். ஆனால் அடைகாத்த முட்டையிலிருந்து குஞ்சு வெளிவந்துதானே ஆக வேண்டும்.

விஷயங்களோடு சேர்த்து, ஒரு நாள் காதலையும் வெளிப்படுத்தியாகி விட்டது.

அப்புறம்?

"பிறகென்ன, வழக்கம் போல் எல்லாக் காதலனும் சொல்வது போல, ஏதாவது ரொம்ப பிரச்சினையாச்சுன்னா கிளம்பி வந்திடுன்னு பிரிட்டோ சொன்னார். அதே மாதிரி ஒருநாள் மாலை பிரிட்டோவைத் தேடிப் போனேன்" என்று த்ரில்லிங்காக சொன்னார் சுதா.

நண்பர் வீட்டில் இரண்டு நாட்கள் தங்க ஏற்பாடு பண்ணியிருக்கிறார் பிரிட்டோ. அதன் பிறகு அவசர அவசரமாக வீடு பார்த்து சுதாவுடன் குடியேறி தனிக் குடித்தனம் ஆரம்பித்தாகி விட்டது. பாத்திரங்கள், சமையல் பொருட்கள் எல்லாம் வாங்கி சமைக்க ஆரம்பித்தார்கள். அட, குடும்ப வாழ்க்கை தொடங்கி விட்டது!

அப்போ திருமணம்?

"எங்க ரெண்டு பேருக்குமே, திருமணம் என்கிற ஒரு சடங்கு மேல நம்பிக்கை இல்லை. அதுவே எங்களுக்கு வாழ்க்கையைப் பிரச்சினை இல்லாம நடத்த சௌகரியமா இருந்துச்சு. ஆனா இந்த விஷயத்துக்கு ப்ரெண்ட்ஸ் வட்டாரத்திலேயும், வீட்டிலேயும் நிறைய எதிர்ப்பு. இரண்டு பேர் வீட்டிலேயும் கூட அக்கா, தங்கைகள் இருக்காங்க. அவங்க லைப் பத்தின கவலை, எதிர்காலத்துல என்ன நடக்குமோங்கிற பயம் இப்படி எல்லா விஷயங்களும் எங்களுக்குள்ள ஓடிக்கிட்டுத்தான் இருந்துச்சுஜி என்று பிரிட்டோ சொல்லும் போதே அவருக்கு காதலில் இருந்த உறுதி தெரிந்தது.

அவர்கள் இணைந்து வாழத் துவங்கியபோது, சுதா வலிவலம் கிராமத்துப் பள்ளியிலும், பிரிட்டோ திருத்துறைப் பூண்டி பள்ளியிலும் வேலை பார்த்துக் கொண்டிருந்தார்கள். அந்த ஊருக்குப் பக்கத்தில் தான் வீடும் பார்த்திருந்தார்கள். ஒரு வருடம் கழித்து எதார்த் பிறந்தான்.

"என்ன பெயர் வித்யாசமா இருக்கேன்னு பார்க்கிறீங்களா? இது தமிழ்ப் பெயர் மட்டும் தான். ஸாதி, மதம் எதுவும் சார்ந்த பெயர் இல்ல" என்று எதார்த்தைக் கொஞ்சிக் கொண்டே சொல்கிறார் சுதா.

"இவன் பிறந்ததுக்கு அப்புறம் தான் இரண்டு வீட்டிலேயும் பேச ஆரம்பிச்சாங்க. ஆனா பிரச்சினைகளும் புதுசு புதுசா முளைச்சுக்கிட்டுத்தான் இருந்துச்சு. எதார்த்துக்கு பெயர் வைக்கிறது கோயில்லையா? சர்ச்சுலையா? என்கிற கேள்வி வந்துச்சு. ஆனா நாங்க மதம் சார்ந்த விஷயங்கள்ல ரொம்ப உறுதியா இருந்தோம். அப்போயிருந்து இப்போ வரைக்கும் வீட்ல மருந்துக்குக் கூட ஒரு சாமி படம் கிடையாதுஜி, என்று சுதா சொல்ல, எதார்த் ஏதோ புரிந்தது போல சிரித்தான்.

எதார்த்துக்கு பள்ளியில் சேரும் வயது வந்தபோது இந்த ஜோடி முன் மற்றொரு பிரச்சினை வந்து நின்றது. சான்றிதழ்களில் இனம், மதம் போன்ற பகுதிகளில் எதையாவது குறிப்பிட்டுத்தானே ஆக வேண்டும்?

"நாங்க கிறிஸ்தவர்-ன்னு போட்டோம். ஏன் அப்பா வழின்னு உங்களுக்குக் கேட்கத் தோணும். ஆனா எங்களுக்கு அப்படித் தோணல! பிற்படுத்தப்பட்டோர் (B.C)-ன்னா அதற்குண்டான அரசாங்கச் சலுகைகளைப் பெறுவதில் தப்பில்லைன்னு முடிவு பண்ணினோம். அதுவும் கூட நடைமுறை வசதிக்காகத்தான். ஆனாலும் எதார்த்துக்கு, எங்க இரண்டு பேரோட பெயரையும் சேர்த்துத் தான் இனிஷியல் வைத்திருக்கிறோம்!" என்று சொல்லும் சுதாவும் பிரிட்டோவும் இப்போது சென்னையில் குடியேறியிருக்கிறார்கள்.

"தாலி இல்லையே எல்லோரும் அதப்பத்தி கேப்பாங்களே, என்ன பண்ணுவீங்க?" கல்யாணத்துக்குத் தாலியா நான்சென்ஸ்!"

"பக்கத்து வீட்டுக்காரங்க, ஸ்கூல் எல்லாத்திலயும் விசாரிப்பாங்க. புரிஞ்சுப்பாங்கன்னு நினைச்சுக்கிட்டு விஷயத்தைச் சொல்லுவோம். புரிஞ்சுக்கலைன்னா விட்டுடுவோம். எல்லாம் பழகிடுச்சு, இதைப் பெரிய புரட்சின்னு சொலறாங்க. ஆனா இதுல ஒண்ணும் புரட்சி எல்லாம் இல்ல. இது மாதிரி வாழறவங்க எண்ணிக்கை குறைவுங்கிறதுனால வித்தியாசமா தெரியுது" என்று சொல்கிறார் பிரிட்டோ.

"தாலி கட்டலையேன்னு உங்களுக்கு உறுத்தலையா? நம்ம சமூகத்துல தாலி மிகப் பெரிய விஷயமாச்சே?ஜி"

"மீடியாதான் இந்த மாதிரியான விஷயங்களை திரும்பத் திரும்ப சொல்லும். நிறைய சினிமாவுல தாலி சென்டிமெண்ட் காட்சிகள் வரும்போது இது தேவையான்னு தோணும். இது பத்தி நிறைய பேர்கிட்ட பேசணும்னு கூட நினைச்சிருக்கோம். ஆனா, அது ரிவர்ஸ் பிராசஸ் ஆகி, அவங்கதான் நமக்கு அறிவுரை சொல்ற மாதிரி ஆயிடும்"- என்று சிரிக்கும் சுதா, "எத்தனை பெண்கள் தாலியை விரும்பிக் கட்டிக்கிறாங்கன்னு சொல்லுங்க? ஏதோ ஒரு கட்டாயத்துலதான் இந்த சடங்கையெல்லாம் ஏத்துக்கிறாங்க. மொழி, கடவுள் மாதிரி, மனிதன் கண்டுபிடித்த விஷயங்கள்ல கல்யாணமும் ஒண்ணு. இதுக்கு தாலிங்கற அடையாளம் வேறுஜி என்கிறார்.

"நிறைய இயக்கங்கள்ல, புரட்சி பண்ணுகிறோம்ங்கிற பேர்ல, தாலிய அறுக்கப் போறோம்னு சொல்லி மேடையேறி போலியான புதுமையைச் செய்யறாங்க. அதுக்கு தாலியைக் கட்டாமலேயே புரட்சி பண்ணலாமே? சீர்திருத்தத் திருமணம் கூட இப்ப சடங்கு மாதிரி ஆயிடுச்சு" என்கிறார் பிரிட்டோ.

"இப்ப பிடிச்சிருக்குன்னு சேர்ந்து வழறீங்க. ஒரு வேளை நாளைக்கு பிடிக்கலைன்னா பிரிஞ்சுடுவீங்களா?"

"ரெண்டு பேர் சேர்ந்து வாழறதை தீர்மானிக்கிறது தாலி இல்லை. மனசு. தாலிக்கும் வாழ்க்கைக்கும் என்ன சம்பந்தம்? நாம வாழற வாழ்க்கையை நிம்மதியா சந்தோஷமா வாழணும். அவ்வளவு தான். கல்யாணம், தாலி, சடங்கெல்லாம் நான்சென்ஸ். தாலி கட்டினாத்தான் சந்தோஷம் கிடைக்கும். நிம்மதியான வாழ்க்கை கிடைக்கும்னு நினைக்கிறது நல்ல காமெடி. அப்படிப் பார்த்தா பேப்பர்ல ஜுமனைவி கொலை - கணவன் தலைமறைவு" கள்ளக் காதல்" இந்த மாதிரியெல்லாம் செய்தியே வரக் கூடாது. இவங்கள்லாம் தாலிகட்டி கல்யாணம் பண்ணிக்கிட்டவங்கதானே?"

பதில் சொல்ல முடியாத ஒரு கேள்வியைக் கேட்கிறார் பிரிட்டோ.

இவர்களது வாழ்க்கை, புரிந்தவர்களுக்கு சுவாரஸ்யமானது. புரியாதவர்களுக்கோ அபத்தம்.

## தினமணி ஆசிரியர் மீது அக்கரைப்பற்று பொலிசார் தாக்குதல்



தினமணி ஆசிரியர் இப்றான்சா பவுடீன்னை அக்கரைப்பற்றுப் பொலிசார் தாக்கியமையை புதிய சமதர்மம் வன்மையாகக் கண்டிக்கின்றது.

அக்.கரைப்பற்று பகுதியில் நிலவிய பதட்டம் தொடர்பான நிலையை ஆராய்வதற்கு அங்குள்ள மசூதி ஒன்றில் அப்பகுதி மக்கள் ஒன்று கூடியுள்ளனர். திடீரென அங்கு தோன்றிய பொலிசார் மக்களைத் தாக்கியுள்ளனர். பொலிசாரின் நடவடிக்கையை அங்கு புகைப்படக்கருவியுடன் நின்ற தினமணி ஆசிரியர் படம் எடுத்துள்ளார். தினமணி ஆசிரியரின் நடவடிக்கையை அவதானித்த பொலிசார், பவுடீனிடம் படச்சுருளையும், படப்பிடிப்புக் கருவியையும் தருமாறு கோரியுள்ளனர்.

இதற்கு புவுடீன் மறுப்புத் தெரிவிக்கவே, மிக மோசமாக பொதுமக்கள் முன்னிலையில் பவுடீனை தாக்கியுள்ளனர். பவுடீன் பிரபல பத்திரிகையாளர் என்பது எல்லோருக்கும் தெரியும். இருந்தபோதும் பொலிசார் பூச்சி புழுக்களைத் துன்புறுத்துவது போல் பவுடீனை நடத்தியுள்ளனர். இதன் பின்பு பவுடீனையும் ஏனைய பொதுமக்களையும் பொலிஸ் நிலையம் கொண்டு சென்று தாக்கியுள்ளனர்.

இறுதியாக இவர்கள் மீது போலியாக குற்றச்சாட்டுகளை சுமத்தி தடுப்புக் காவலில் வைத்துள்ளனர். பவுடீன் உடன் கைது செய்யப்பட்ட பொதுமக்களில் வங்கி ஊழியர் உட்பட பல அரச ஊழியர்களும் இருந்துள்ளனர்.


பவுடீனுக்கும், ஏனையவர்களுக்கும் நடந்த துன்ப நிகழ்வுக்காக பல்வேறு பகுதிகளில் இருந்தும் கண்டனங்கள் எழத் தொடங்கியுள்ளது. இலங்கையில் பத்திரிகையாளர் தாக்கப்படுவது, கொல்லப்படுவது இப்போது நாளாந்தம் நடைபெறும் நிகழ்வு ஆகிவிட்டது. ஒரு நாட்டின் ஜனநாயகத்தின் கண்களே பத்திரிகை என்பார்கள். ஆனால் இலங்கையில் அந்த கண்களையே சிதைப்பதற்கு பொலிசார் முயல்கின்றனர் போலும்.

பவுடீனுக்கு நடந்த மோசமான தாக்குதலுக்கு எதிராக புதிய சமதர்மம் தனது கண்டனத்தைத் தெரிவிக்கின்றது. பொலிசாரின் இக்காட்டு தர்பார் நடவடிக்கைக்கு எதிராக எடுக்கப்படும் எல்லா நடவடிக்கைகளிலும் புதிய சமதர்மம் கலந்து கொள்ளும்.

படிப்பகம்

www.padippakam.com





# கடலில் மூழ்கிய ரஷ்ய நீர்மூழ்கிக் கப்பலில் வெளிவரும் உண்மைகள்

**ஆகஸ்ட் 12ம் தேதி,** ரஷ்ய மக்களுக்கு, பேரிடியென ஒரு சோகச் செய்தி வந்தது. அதுதான் ரஷ்யாவின் அதிநவீன அணுசக்தியுடன் கூடிய நீர்மூழ்கிக் கப்பலான கேர்ஸ்க் பறென்ற்ஸ் கடலில் மூழ்கி விட்டது என்ற செய்தி. கப்பலில் இருந்த 118 மாலுமிகளும் உயிர் துறந்துள்ளனர். இவர்களின் உடல்களைக் கூட ரஷ்ய ஆட்சியாளர்களால் உறவினர்களிடம் கையளிக்க முடியவில்லை. மலர்ச் செண்டுகளை சமுத்திரத்தில் போட்டு தமது அடக்க முடியாத வேதனையை மாலுமிகளின் குடும்பத்தினர் வெளிப்படுத்தியிருந்தனர்.

ரஷ்யாவின் கேர்ஸ்க் நீர்மூழ்கிக் கப்பல் கடலில் மூழ்கியதன்பின் பல் வேறுபட்ட அபிப்பிராயங்கள், கண்டனங்கள், அபாய எச்சரிக்கைகள் வெளிவந்த வண்ணம் உள்ளன. அணு ஆயுத வல்லரசுகளான ரஷ்யா, ஐக்கிய அமெரிக்கா, மேற்குலக நாடுகள் கடலுக்கு அடியில் எவ்வளவு பயங்கரமான நாடகத்தை நடத்தி வருகின்றன என்ற உண்மை வெளியே வந்துள்ளது. இயற்கையை நாசமாக்கும் மனித உயிர்களை பலிவாங்கும், கொடுமையான ஆயுதங்களுடன் கடலுக்கடியில் இந்நாடுகள் நடத்தும் திருகுதாளங்களை அம்பலமாக்கியுள்ளன.

ரஷ்யாவின் பிரதி முதலமைச்சர் இல்யா கல்பனோவ் முதன் முதலாக இந்த அனர்த்தம் பற்றி கருத்துத் தெரிவிக்கையில், கடலுக்கு அடியில் இருந்த மிகப் பெரியதொரு பொருளுடன் மோதியதால் இந்த நாசம் விளைந்துள்ளதாக தெரிவித்துள்ளார். கடலுக்கு அடியில் அந்த பொருள் வேறொரு நீர்மூழ்கி கப்பலாக இருக்கலாம், அல்லது கண்ணி வெடியாகவும் இருக்கலாம் என நம்பப்படுகிறது.

வேறொரு நீர்மூழ்கிக் கப்பலுடன் மோதியிருக்கலாம் என்ற ஊகத்திற்கு 1989ல்நடந்த சம்பவம் ஒன்று வலுவூட்டுவதாக அமைகின்றது. 1989ல் ஐக்கிய அமெரிக்காவினதும், சோவியத் யூனியனினதும் நீர் மூழ்கிக் கப்பல்கள் ஒன்றை ஒன்று மோதியதால் நீரில் மூழ்கின கடற்பரப்பில் ஐக்கிய அமெரிக்கா இன்று வலிமை மிக்கதாக விளங்குகின்றது. இதனால் ரஸ்யாவின் நீர்மூழ்கிக் கப்பல்களை வேவு பார்ப்பதற்காக அமெரிக்க நீர் மூழ்கிக் கப்பல்கள் இக்கடற் பரப்பில் அடிக்கடி தோன்றுவது வழக்கமாகும். ஆனால் அமெரிக்கா இச் சம்பவத்திற்கும் தமக்கும் எதுவித தொடர்பும் இல்லையென வாதிடுகின்றது. ஆனாலும் ரஷ்ய நீர்மூழ்கிக் கப்பல் விபத்துக்குள்ளான தினத்திற்கு இரண்டு நாள் பின்பு அமெரிக்க நீர் மூழ்கிக் கப்பல் ஒன்று நோர்வே கடற்பரப்பில் தளத்தினுள் சென்றதாகத் தெரிய வருகின்றது.

நோர்வே தளத்தினுள் சென்ற அமெரிக்க நீர்மூழ்கிக் கப்பல் சேதத்திற்கு உள்ளானதா, அல்லது ஏதும் திருத்த வேலைகள் நடைபெறுகிறதா என்பது பற்றி எதுவும் தெரியாத நிலையே காணப்படுகிறது.

விபத்துக்குள்ளான ரஷ்ய நீர் மூழ்கிக் கப்பல், மூழ்கிய இடத்திற்கருகே அமெரிக்க, பிரித்தானிய நீர் மூழ்கிக் கப்பல்கள் அடிக்கடி தென்படுவது சாதாரணமாக இருந்தது என்று சொல்லப்படுகிறது. இக்கடற்பரப்பில் ரஷ்ய கப்பல்கள் பயிற்சியில் ஈடுபடும்போது அவற்றை இக்கப்பல்கள் கண்காணித்தே வந்துள்ளன. எனவே இவற்றைத் தடுப்பதற்காக ரஷ்யா வேண்டுமென்றே இவ்விபத்தை ஏற்படுத்தி இருக்கலாம் என்றும் பேசப்படுகிறது. அதேவேளை இந்த விபத்து நடந்துள்ள கடற்பரப்பில், 2வது உலக மகாயுத்தத்தின் போது ஏராளமான கண்ணிவெடிகள் வைக்கப்பட்டதாகவும் செய்திகள் வெளிவந்துள்ளன. கண்ணி வெடியில் மோதி ரஷ்ய நீர் மூழ்கிக் கப்பல் நீரில் மூழ்கியிருக்கலாம் என்றும் நம்பப்படுகிறது.

எது எப்படி இருந்தாலும், ரஷ்யா, அமெரிக்கா, மேற்கு நாடுகள் கடலுக்கு அடியில் மனித சமுதாயத்துக்கும், இயற்கைக்கும் நாசம் விளைவிக்கும் முயற்சியில் ஈடுபட்டு உள்ளன என்பது தெளிவாகி உள்ளது. அணு ஆயுதங்கள், இரசாயன பொருட்கள் என்பவற்றுடன் இந்நீர் மூழ்கிக் கப்பல்கள் கடலுக்கு அடியில் திரிகின்றன. இவற்றால் விளையப் போகும் அழிவைப் பற்றி இவை சிறிதளவாவது சிந்திக்கின்றனவா என்பது புதிராகவே உள்ளது.

அமெரிக்காவுக்கும், சோவியத் யூனியனுக்கும் இடையேயான பனிப்போர் முடிவடைந்து விட்டதாகவே மேற்குலகம் கனவு கண்டது. இதன்பயனாக மேற்கு நாடுகளின் பாதுகாப்பு செலவினம் குறையும் என்றும் பல நாடுகள் மனப்பால் குடித்தன. இவையாவும் இன்று கனவாகவே போய் உள்ளன. அணுஆயுதக் கப்பல்கள் கடலுக்குள் அடியில் செல்வதால் ஏற்படக்கூடிய அபாயம் பற்றி சம்பந்தப்பட்ட நாடுகள் கவலை கொண்டுள்ளதாகத் தெரியவில்லை. அமெரிக்காவின் கருத்தைப் பார்க்கின்றபோது, ரஷ்ய நீர் மூழ்கிக் கப்பல்கள், பெரும் இரசாயன ஆயுதங்களுடன் சென்று வருகின்றன. இந்த ஆயுதங்கள் வினியோகிப்பதற்காகவும் கொண்டு செல்லப்படுகிறது. அத்துடன் இக் கப்பல்களின் பாதுகாப்புக்காக பெருமளவு ஆயுதங்கள் கப்பல்களில் கொண்டு செல்லப்படுகிறது. கப்பல்களை, விமானங்களைத் தாக்கும் நவீன கருவிகளுடன் கூடிய ஆயுதங்களும் இருந்துள்ளன. இவை யாவும் அமெரிக்காவைக் குறிபார்த்து எடுக்கப்பட்ட நடவடிக்கையாகும். இது அமெரிக்க கருத்தாகும்.

ரஷ்ய நீர் மூழ்கிக் கப்பலுடன் மோதிய நீர் மூழ்கிக் கப்பலுக்கு பெருமளவு சேதம் ஏற்பட்டிருக்க முடியாது என நம்பப்படுகிறது. நீரில் மூழ்கிய ரஷ்ய நீர் மூழ்கிக் கப்பலை பரிசோதித்த நோர்வே விஞ்ஞானிகள் கதிர் வெளியேற்றம், இரசாயனக் கழிவு எதுவும் இடம் பெறவில்லை என தெரிவித்துள்ளனர். இதனால் ஓரளவு நிம்மதி ஏற்பட்டுள்ளது. பெருமளவு சேதம் ஏற்பட்டிருக்குமானால், பறென்ற்ஸ் கடல் பகுதியை சூழவுள்ள நாடுகள், இயற்கை வளங்கள் அழிவுக்குள்ளாகி இருக்கும்.

தற்போது நீரில் மூழ்கிய ரஷ்ய நீர் மூழ்கிக் கப்பலான கேர்ஸ்க் விடயத்தை மிகப் பெரிதுபடுத்தி மகிழ்ச்சி ஆரவாரத்தில் மேற்குலக தொடர்பு சாதனங்கள் செய்திகளை அள்ளிவீசிக் கொண்டு இருக்கின்றன. நீரில் மூழ்கிய கப்பலை மீட்க முடியாமல் போனமைக்கு ரஷ்ய ஆட்சியாளர்களின் பலவீனம் காரணமாகக் கொள்ளப்படுகிறது. ஆனால் பலம் பொருந்திய சோவியத் ஒன்றியத்தைப் பலவீனம் அடையச் செய்தவர்கள் யார் என்பது உலகிற்குத் தெரியும். இதற்கான விலையை அமெரிக்காவும், மேற்கு நாடுகளும் வரலாற்றில் செலுத்த வேண்டியேவரும்.

மூழ்கிய கப்பலை மீட்கும் நடவடிக்கையில் ரஷ்ய ஆட்சியாளரோ, படைத் தரப்போ, பெரிய முயற்சிகள் எதுவும் செய்யவில்லை. ரஷ்ய ஜனாதிபதி இக்காலப் பகுதியில் கருங்கடல் பகுதியில் உல்லாசமாக பொழுதைக் கழித்துக் கொண்டிருந்ததாகத் தெரிய வருகிறது. செய்தி அறிந்ததும் மொஸ்கோ திரும்பிய புட்டின் இறந்த மாலுமிகளுக்கான அனுதாபச் செய்தி எதையும் வெளியிடவில்லை.

ரஷ்ய கடற்படைத் தளபதியான மிக்கயில் மொற்சாக், அவர்களின் கையாலாகாத்தனம் பற்றி உலகம் முழுவதிலும் இருந்து கண்டனங்கள் வெளிவந்து கொண்டிருக்கின்றன.

ரஷ்ய குடியில் இராணுவ அதிகாரிகள் அமெரிக்காவினதும், மேற்குலகத்தினதும், உதவி கோரிக்கைகளை நிராகரித்தே வந்துள்ளனர். அமெரிக்கா உதவி கேட்டபோது நோற்ரோவுக்கூடாகச் செய்யுமாறு கோரியுள்ளனர். ரஷ்யர்-



களால் செய்ய முடியாததை நோர்வே நாட்டினர் செய்துள்ளனர். நோர்வே சுழியோடிகளே நீரில் மூழ்கிய ரஷ்ய கப்பலை முதன் முதலாக அணுகி சேதத்தைக் கண்டறிந்தனர். இதே நேரம் பிரித்தானிய விசேட நீர் மூழ்கிக் கப்பல்கள் உதவி வழங்குவதற்காக இப்பகுதியில் தயார் நிலையில் இருந்துள்ளனர்.

நோர்வே சுழியோடிகள் எடுத்த வீடியோ படங்கள் மூலம் மேற்குலகத்திற்கு செய்திகள் விரைவாகச் சென்றன. ஆனால் இவ்விபத்து பற்றி ரஷ்யாவை விட அமெரிக்கா அதிகம் அறிந்துள்ளதாகப் பலர் தெரிவிக்கின்றனர்.

இதில் இருந்து ரஷ்ய ஆட்சியாளர்களின் பலவீனங்கள் மற்றும் இராணுவத்தினரின் செயலின்மை, தொழில்நுட்ப பலவீனங்கள் யாவும் அம்பலத்துக்கு வந்துள்ளன. இவை பற்றி மேற்குலகம் பெருமகிழ்ச்சி அடையலாம். ரஷ்யாவின் சோசலிசம் செல்வாக்கற்று உள்ளது. சோவியத் ஒன்றியமே அஸ்தமனம் ஆகி விட்டது என்று இறுமாப்பு கொள்ளலாம். ஆனால் ரஷ்யாவின் சோசலிசக் கொள்கைக்கு மாற்றீடான கொள்கையை முன்வைத்தவர்கள் யார்? மேற்குலகம் இதற்குப் பதில் கொடுக்க முடியாது ஏன் என்றால் மேற்குலகமே இன்றைய ரஷ்யாவை சிருஷ்டித்தது. மேற்குலகத்தவர்கள் அறிவுரைக்கு இணங்க ரஷ்யா செயற்பட்டதால் தான் இந்த நிலைக்கு ஆளாகி உள்ளது. இன்று ரஷ்யாவில் இராணுவத்தினருக்குப் பல மாதமாக வேதனம் வழங்கப்படாமல் உள்ளது.

ரஷ்ய மக்கள் வாழ்க்கைச் செலவைத் தாங்க முடியாமல் தவியாய்த் தவிக்கின்றனர். மூழ்கியது ரஷ்யாவின் கேர்ஸ்க் நீர் மூழ்கிக் கப்பல் மாத்திரம் அல்ல, ஜனாதிபதி புட்டினின் கொள்கைகளும் கப்பலுடன் மூழ்கியுள்ளதாக ரஷ்ய மக்கள் பேசுகின்றனர்.

ரஷ்ய நீர் மூழ்கிக் கப்பல் அனர்த்தத்தில் இருந்து உலகம் நிறைய பாடங்களைப் படிக்க வேண்டியுள்ளது. குறிப்பாக அணு ஆயுதத்துடன் விளையாட விரும்பும், இந்தியா, பாகிஸ்தான் ஆகிய நாடுகளும் இதன் அபாயத்தைப் புரிந்து கொள்ள வேண்டும். அணு ஆயுதம் நிலையாக நிலப்பரப்பில் வைத்திருப்பதைவிட கடலில் நடமாடும் கப்பல்களில் வைத்திருப்பது எவ்வளவு மோசம் என்பது வெளிச்சத்துக்கு வந்துள்ளது.

கோடிக் கணக்கான பொருட் செலவில் உருவாக்கப்பட்ட ரஷ்ய நீர் மூழ்கிக் கப்பலான கேர்ஸ்க் ஒரு சில நிமிடத்தில் நீருக்குள் மூழ்கியுள்ளது. இந்த நட்டத்தை ரஷ்ய மக்களே சுமக்கப் போகின்றார்கள். சிலவேளை கேர்ஸ்க் வெடித்து சிதறியிருந்தால் அதன் நட்டத்தை உலகம் முழுவதுமே சுமக்க வேண்டி வந்திருக்கும்.

www.padippakam.com



# மலையகத் தொழிலாளரும், குடியிருப்பு வீடு, காணிகளுக்கான உரிமையும்

(சென்ற இதழின் தொடர்ச்சி...)

கூட்டுறவு சங்க விதிகள் பற்றிப் பரவலான சந்தேகங்கள் உண்டு. குடியிருப்புகள் தொழிலாளருக்குச் சொந்தமானது உண்மையானால் பிறிதொரு கூட்டுறவு அமைப்பு ஏன் என்ற கேள்வி எழுகின்றது. மேலும் இக்கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் தொழிலாளர்களால் தெரிவு செய்யப்படமாட்டார். ஆனால் தோட்ட நிர்வாகியே இதன் தலைவராக இருப்பார். இது தோட்டத் தொழிலாளரின் குடியிருப்பு உரிமைகளின் நிர்வாகத்தின் தலைமையீட்டிற்குத் தொடர்ந்தும் வழிவகுக்கும் ஒன்றாக அமைகின்றது. இத்தகைய ஐயப்பாடுகள் தீர்க்கப்படாத நிலையில், ஏற்கனவே 200 தோட்டங்களுக்கு மேலாக, இப்பெருந்தோட்டத்துறைக் கூட்டுறவுச்சட்ட விதிகளுக்கமைய ரூபா 250 என்ற அடிப்படையில் நிதி சேகரிக்கப்பட்டுள்ளது. இந்த நிதி சேகரிப்பு முறைமை குறித்தோ, இந்த நிதிக்கு என்ன நிகழ்கின்றது என்பது குறித்தோ தெளிவில்லாமல் உள்ளது.

தெளிவில்லாத பிறிதொரு அம்சம் தொழிலாளருக்கான வீடுகள் கட்டப்படும் பட்சத்தில் அவ்வீடுகளுக்கான நிலம் யாருக்குச் சொந்தம் என்பதாகும். நிர்வாகம் தனியார் கம்பனிகளிடம் இருந்தாலும் நிலத்தின் உரிமையாளராக அரசே இன்று இருந்து வருகின்றது. இலங்கையின் காணி பங்கீட்டு முறையைப் பார்ப்போமாயின் அது பின்வருமாறு அமைகின்றது.

இலங்கையின் மொத்த நிலப்பரப்பு 16.228.230 ஏக்கர்

(அ) அரசுக்குச் சொந்தமான நிலப்பரப்பு - 13,347,630 ஏக்கர் (82.3%)

(ஆ) தனியாருக்கும், ஆலயங்களுக்கும் சொந்தமான நிலப்பரப்பு - 2,880,600 ஏக்கர் (17.7%)

அரசுக்குச் சொந்தமாக அமைகின்ற கணிசமான நிலப்பரப்பில் இப்போது பெருந்தோட்டக் காணிகளும் அங்கம் வகிக்கின்ற நிலையில் போதிய ஆவணரீதியான உத்தரவாதம் அற்ற நிலையில் அரச காணிகளில் தமது வீடுகளைக் கட்டும் பட்சத்தில் தொழிலாளரின் நில உரிமை குறித்த அம்சம் தெளிவாக்கப்படுவது அவசியமாகும்.

இந்த அடிப்படையில் தற்போது அமைக்கப்பெற்றுள்ள பெருந்தோட்டத் தொழிலாளர் வீட்டுக் குடியிருப்புக்களுக்கான சபை கவனத்தில் கொள்ள உள்ள மூன்று பிரிவுகளான குடியிருப்புகள் எவ்வாறு அமைய வேண்டும் என்பதைக் குறித்த விவரணம் முன்கூட்டியே அவசியமாகிறது.

தற்காலிகக் குடில்களை தனி வீடுகளாக மாற்றுதல் அடர்த்தியான லயன் அறைகளில் உள்ள மேலதிக குடும்பங்களுக்கு புது வீடுகளை நிர்மாணித்தல், தொடர்ந்தும் இருக்கின்ற லயன் அறைகளைப் புனரமைக்க வசதிகளை இம்மூன்று பிரதியீடுகள் மூலம் லயன் குடியிருப்பு என்ற கருத்தை இல்லாமல் ஆக்க வழிவகைகளை முன்வைப்பதே இந்த சபையின் பிரதான பணியென தெரியவருகிறது.

இவ்வாறான தொழிலாளர் குடியிருப்புக்கள் அமையப் பெறுவதில் உள்ள தேவைகளை அடையாளம் காணுவது அவசியமாகும். தற்போதைய 120 சதுர அடி விஸ்தீரணம் கொண்ட லயன் அறைகளுக்கு பிரதியீடான வீடமைப்பு குறைந்த பட்சம் 600 சதுர அடிகளையாவது கொண்டிருப்பது அவசியமாகும். தற்போதைய வீட்டு கட்டிட சராசரி குறைந்த பட்சக் கட்டணமாக ஒரு சதுர அடி நிர்மாணத்திற்கு ரூபா 700 செலவாகின்றது. இதன் அடிப்படையில் ஒரு தோட்ட தொழிலாளரின் சராசரி மட்டக் குடியிருப்பு நிர்மாணச் செலவு 700 x 600 சதுர அடி ரூபா 4,20,000/= ஆகும். இத் தொகையை முழுமையாக அரசாங்கம் அல்லது நிர்வாகத்தில் இருந்து எதிர்பார்ப்பது உசிதமானதல்ல. ஏனெனில் தொழிலாளர் வீடுகளுக்கு சொந்தக்காரர் ஆகும் பட்சத்தில் அவர்களதும், சமூகத்தினதும் பங்களிப்பும் இருப்பது அவசியமாகும். இப்பங்களிப்பு உழைப்பினை வழங்குதல் மூலம் செய்யப்பட முடியும். சமூக பங்களிப்பு 50% வீதமாக அமையும் பட்சத்தில் ஒரு வீட்டின் நிர்மாணச் செலவை ரூபா 200,000/- அளவில் மதிப்பிடலாம். ஆனால் கடந்த காலங்களில் தொழிலாளர் வீடு எனும் போது எவ்வித உண்மை. நிர்மாணச் செலவுகளின் அடிப்படையில் அன்றி ஒரு குத்து மதிப்பீடாக ரூபா 20,000/- வீட்டுத்திட்டக் கடனுதவி என்ற வகையிலேயே வழங்கப்பட்டு வந்துள்ளது. அத்தகைய அணுகுமுறை பயன்தராது என்பதுடன், ரூபா 200,000க்கு (சமூக பங்களிப்பு போக) குறைவாக ஒதுக்கப்படும் நிதியால் நடைமுறையில் பயனில்லாமலல் போய்விடும். இவ்வாறு திட்டமிடும் குடியிருப்பு நிர்மாணங்களில் மேலும் மூன்று அம்சங்கள் கவனிக்கப்பட வேண்டும்.

* இத்தகைய கட்டட நிர்மாண வேலைகள் உருவாக்கும் உப தொழில்களான வாய்ப்புகள் தோட்டப் புறத்தைச் சார்ந்த வேலையற்றோருக்கு வழங்கப்பட வேண்டும். இதற்காக தச்சு, கட்டிட வேலை, வயரிங் போன்ற தொழில் ட்ப்ப பயிற்சிகள் வழங்கப்பட வேண்டும்.
* வெறும் 600 சதுர அடி வீட்டோடு நின்றுவிடாமல், வீட்டுத் தோட்டங்கள் மற்றும் குடும்பத் தேவைகளுக்கான காணியும் சேர்ந்து ஒவ்வொரு தொழிலாளர் குடும்பத்திற்கும் குறைந்தது 10 பேர்ச்சஸ் நிலமாவது வழங்கப்படுவது அவசியம்.
* இவ்வாறு வீடுகள் நிர்மாணிக்கப்பட்டதும் லயன் முறை என்பது நடைமுறையில் இல்லாமல் ஆக்கப்பட வேண்டுமானால், ஒவ்வொரு தொழிலாளர் குடியிருப்புக்கும் இடையிலான நியாயமான இடைவெளி அமைவதும் அவசியமாகிறது. மேலும் எதிர்கால நிலப்பற்றாக் குறையை மனதில் கொண்டு இத்தகைய தனித்தனியான வீடுகள், மேலதிக மாடிகள் அமைக்கக் கூடிய விதத்தில் அமைவது குறித்தும் யோசிப்பது இத்திட்டத்தை மேலும் பூரணமாக்க உதவும். இவற்றில் கூட்டுறவுக் கடைகள், சமூக நிலையங்கள் உபதபால் நிலையம், விளையாட்டு மைதானங்களும் உள்ளடங்க வேண்டும்.
* நடைமுறை சாத்தியத்தோடு வெகுவாக தொடர்புடைய அம்சம் மேற்குறித்த எந்தவொரு தொழிலாளர் குடியிருப்பு நிர்மாணத்திற்கான ரூபா 200,000த்தை எவ்வழிகளில் பெற்றுக் கொள்வது என்பதாகும். பின்வரும் ஆலோசனை அதற்கான ஒரு சாத்தியப்பாடாகும்.

- தோட்டத் தொழிலாளர் சேமலாப நிதியில் இருந்து ஒதுக்கீடு - ரூபா 50,000
- ஏனைய நிதி வழங்கும் நிறுவனங்கள் ஊடாக ரூபா 50,000
- குடியிருப்பு உரிமையாளரும் தொழிலாளருக்கு வட்டியில்லா கடனாக - ரூபா 100,000

மொத்தம் 200,000

ஏற்கனவே பல நிதி வழங்கும் நிறுவனங்கள் இலங்கையிலும், மலையகத்திலும் கட்டுமான வேலைத்திட்டங்களுக்கு நிதி உதவி வழங்கியுள்ளமையால் தோட்டத் தொழிலாளர் குடியிருப்புகளுக்கும் அவற்றைப் பெறுவது சாத்தியமானதே. அரசாங்கத்தால் நிறைவேற்றப்பட்டுள்ள குடியேற்றத் திட்டங்கள் ஒரு குறிப்பிட்ட மட்டத்திலான வாடகை முறை அமுலில் உள்ளது. குறிப்பிட்ட வருடங்களுக்கு வாடகை செலுத்திய பின்னர் குடியிருப்பவர் வீட்டிற்கும். இடத்திற்கும் பூரண உரிமையாளராகின்றார். தோட்டங்களிலும் தொழிலாளர்கள் வீட்டுக் கடனைக்கட்டி முடிக்கும் தருவாயில் வீடு அது நிர்மாணிக்கப்பட்டுள்ள நிலம் இரண்டிற்கும் பூரண சொந்தக்காரராகும் முறை அமுலாக வேண்டும்.

இத்தகைய ஒரு முழுமையான தொழிலாளர் குடியிருப்பு பற்றித் திட்டமிடுகையில் எழுகின்ற பிரதான பிரச்சினை இதற்கான நில ஒதுக்கீடு சாத்தியமா என்பதே தற்போதைய தோட்டத் தொழிலாளர் குடியிருப்புத் தேவை 300,000 வீட்டு அலகுகள் எனக் கணிப்பிடப்பட்டுள்ளது. ஒரு தொழிலாள குடியிருப்பிற்கு 10 பேர்ச்சஸ் என்ற அளவில் தேவைப்படுகின்ற மொத்தக் காணி 18,250 ஏக்கர்களாகும். இதில் ஏற்கனவே நிர்மாணிக்கப்பட்டுள்ள குடியிருப்புகளை விடுத்தால் தேவைப்படுவது 15,000 ஏக்கர் காணியாகும். இலங்கையில் இதுவரை அரசாங்கத்தால் நடைமுறைப்படுத்தப்பட்டு வந்துள்ள குடியிருப்புத் திட்டங்களோடு ஒப்பிடுகையில் இந்த 15,000 ஏக்கர் நிலப்பரப்பு பெரியதொரு விடயமல்ல என்பது புலனாகும்.

உதாரணமாக பின்வரும் அரசாங்கக் குடியிருப்புக்களை உதாரணம் காட்டலாம்.

குடியிருப்புகளுக்காக ஒதுக்கப்பட்ட அரசாங்க காணிகளின் அளவு - 1935 - 1985

| திட்டங்கள் | ஏக்கர் |
|---|---|
| 1. பாரிய குடியேற்றத் திட்டங்கள் | 4,34,751 |
| 2. கிராம விரிவாக்கல் | 682,737 |
| 3. மேட்டு நிலக் குடியேற்றத் திட்டங்கள் | 33,519 |
| 4. அத்துமீறிய குடியேற்ற காணிகளை ஒழுங்குபடுத்தல் | 508,438 |
| 5. மத்திய வர்க்கத்தினர்க்கான ஒதுக்கீடு | 135.951 |

மேற்குறித்தவற்றிற்கு புறம்பான குடியேற்ற ஒதுக்கீடுகளும் உண்டு. இப்பெரிய காணி அளவுகளோடு ஒப்பிடும் போது தோட்டத் தொழிலாளருக்கான 15,000 ஏக்கர் ஒதுக்கீடு மிகவும் சாத்தியமானதே. இவற்றோடு இதுவரை அரசாங்கத்தால் முன்வைக்கப்பட்டு அமுலாக்கப்பட்ட ஏனைய வீடமைப்புத் திட்டங்களும் கவனத்திற்குரியன.

- ஒரு இலட்ச வீடுகள் (1978)
- பத்து இலட்ச வீடுகள் (1983 - 1989)
- பதினைந்து இலட்சம் வீடுகள் (1991)
- மாதிரிக் கிராமங்கள்
- கம்முதாவ திட்டம்

என்பன இவற்றில் சிலவாகும். இத்திட்டங்களும் எதிலுமே தோட்டத் தொழிலாளரின் குடியிருப்புத் தேவைகள் சேர்த்துக் கொள்ளப்படாததும் கவனத்தில் கொள்ளத்தக்கது.

1992ம் ஆண்டு தோட்டங்கள் தனியார் மயப்படுத்துவதற்கு முன்னால் தோட்ட நிர்வாகம் ஓரளவிற்காவது, தொழிலாளர் வீடமைப்பு, குடியிருப்புத் தேவைகள் குறித்து அக்கறை செலுத்தி வந்தது. இன்று அத்தகைய பொறுப்புகளை முற்றாக தனியார் கம்பனிகள் கைகழுவி விட்ட நிலையில் அரசாங்கமே இப் பொறுப்பினை நடைமுறைப்படுத்த வேண்டியுள்ளது. இங்குள்ள முக்கிய கேள்வி இத்தகைய தொழிலாளர் குடியிருப்புகளுக்கான நில ஒதுக்கீடும். நிதி ஒதுக்கீடும் சாத்தியமா என்பதல்ல, மாறாக ஆட்சியில் வரும் அரசாங்கங்கள் தோட்டத் தொழிலாளருக்கு நியாய பூர்வமான குடியிருப்பு வசதிகளை வழங்குவதற்கான அரசியல் விருப்பினை (Political Will) கொண்டுள்ளதா என்பதே. எனவே தற்போது ஜனாதிபதி தோட்டத் தொழிலாளர் குடியிருப்பு சம்பந்தமாக கொண்டுள்ள அணுகுமுறை ஒரு அரசியல் விருப்பின் வெளிப்பாடாக இருப்பின் வரவேற்கத்தக்கது. மாறாக அது இன்னொரு தேர்தல் தந்திரமாக அமையும் பட்சத்தில் தோட்டத் தொழிலாளர்கள் தாம் மீண்டும் ஏமாளிகளாக ஆகிவிடாது பார்த்துக் கொள்வதும் அவசியம்.

தோட்டத் தொழிலாளருக்குத் தேவை வெறும் கட்டிட வசதி என்ற பெயரிலான வீடுகள் அல்ல மாறாக கௌரவமான, நிம்மதியான தனித்துவ குடும்ப வாழ்க்கைக்குத் தேவையான குடியிருப்பு வசதிகளும் அவற்றிற்கான திட்டங்களுமாகும். இது குறித்த தொழிலாளர் மத்தியிலான விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுவதோடு. கடந்த காலங்களில் காட்டப்பட்ட அசிரத்தைகளைப் போலன்றி மலையக தொழிற் சங்கங்கள், சமூக ஸ்தாபனங்கள், புத்திஜீவிகள் அனைவரும் அந்த அம்சத்தில் தமது கவனத்தைச் செலுத்துவது அவசியம். இதற்கு முன்னர் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட தோட்டப்புற சமூக. கலாச்சார விடயமாகவே இளைஞர் நிலைப்பாட்டிற்கான சபையிலும் தோட்டப்புற வீடமைப்பு ஒரு அம்சமாக உள்ளடக்கப்பட்டிருந்தது. ஆனால் அச்சபையால் விளைந்த நன்மைகள் எதுவுமே இல்லை. அத்தகைய நிலை இப்போது அமைக்கப்பட்டுள்ள பெருந்தோட்டத்துறை தொழிலாளர் வீடமைப்பு சபைக்கு நேர்ந்து விடாமல் பார்த்துக் கொள்வது தோட்டத் தொழிலாளர் நலனில் அக்கறை உள்ள அனைவரதும் கடமையாகும்.

அருட் தந்தை
ச. கீதபொன்கலன்
வியோ மார்கா ஆச்சிரமம்

படிப்பகம்

www.padippakam.com



# அமைச்சர்களுக்கு வேதனம் மட்டும் 130 லட்சம்

உலகிலேயே அதிக அமைச்சர்களைக் கொண்ட நாடாக இலங்கை விளங்கப் போகிது. 11வது நாடாளுமன்றத்தில் 44 அமைச்சர்கள் சத்தியப்பிரமாணம் செய்துள்ளனர். இவர்களுக்கு உரிய வேதனம் மட்டும் மாதம் 130 லட்சம் ரூபாயாக உள்ளது. பொதுமக்களின் பணத்திலிருந்து இத்தகைய பெருமளவு நிதி அவர்களுக்கு வேதனமாக வழங்கப்பட இருக்கிறது. மிகவும் ஏழை நாடாக விளங்கும் இலங்கையால் இத்தகைய பெரும் சுமையைச் சுமக்க முடியுமா?

இதேவேளை மேலும் 100 லட்சம் ரூபா பிரதி அமைச்சர்களுக்கான வேதனமாக வழங்கப்பட வேண்டி உள்ளது. இப்பணமும் பொதுமக்கள் நிதியில் இருந்தே செலுத்த வேண்டும். இதைவிட அமைச்சர்களுக்கான ஏனைய சலுகைகளுக்கான செலவுக்கும் அதிகளவு நிதி ஒதுக்க வேண்டும். இதனால் பொதுமக்கள் மேலும் மேலும் பொருளாதார சுமையை சுமக்க வேண்டிய துர்பாக்கிய நிலையில் உள்ளனர். கடந்த பாராளுமன்றம் கலைக்கப்படுவதற்கு சொற்ப நாட்களுக்கு முன்பாக மந்திரிமார், பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு, வேதனம் அதிகரிக்கப்படமாட்டாது. மந்திரிமாரின் வேதனம் 100,000 ரூபாவால் அதிகரிக்கப்பட்டது. அத்துடன் சகலருக்கும் 2 வருட நிலுவையும் வழங்கப்பட்டது.

மந்திரிமார்களுக்கு விருந்துபசாரங்களுக்கான கொடுப்பனவாக 5000 ரூபா வழங்கப்படுகிறது. கட்டுப்பாடற்ற எரிபொருள் கொடுப்பனவு, இரண்டு தொலைபேசி இணைப்புகள், கையில் வைத்திருப்பதற்கான தொலைபேசி, மற்றும் கணணிகள், தட்டச்சு இயந்திரங்கள், விசேட கடன் வசதிகள், வகை தொகை இன்றி காகிதாதிகளும் பெற்றுக் கொள்ளலாம்.

மேலும் வரிகள் எதுவும் இல்லாத இறக்குமதி செய்வதற்கான அனுமதிப்பத்திரம், மதுபான பத்திரம், 12 உதவியாளர்கள், ஐந்து வருடங்களின் பின் ஓய்வூதியம், என சலுகைகள் நீண்டு கொண்டே போகிறது. இத்துடன் தனிப்பட்ட பாவனைக்காக இரண்டு வாகனங்களும், அத்துடன் பாதுகாப்புப் பிரிவும் கொடுக்கப்படுகிறது. அண்மையில் கூட 18 குண்டு துளைக்காத வாகனங்கள் வழங்கப்பட்டுள்ளன. இவற்றுக்கான செலவு 448 பில்லியன் ரூபா ஆகும். இதுவும் பொதுமக்கள் நிதியில் இருந்தே செலவு செய்யப்பட்டுள்ளது.

தற்போது புதிதாக தெரிவு செய்யப்பட்டுள்ள 66 பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும், மேற்படி சலுகைகளை வழங்க வேண்டிய நிலையில் அரசு உள்ளது. 100 கோடி சனங்கள் உள்ள இந்தியாவில் 37 அமைச்சர்களே உள்ளனர். அதேநேரம் 18 மில்லியன் சனத்தொகையுள்ள இலங்கையில் 44 அமைச்சர்கள் உள்ளனர்.

## நல்லையல்லை நெடுவெண்ணிலவே!



இல்லும் இழந்தனம் ஊரும் இழந்தனம்
எல்லாம் இழந்தே எதிலியர் ஆனோம்
வேற்றூர் தன்னில் வெயிலுக் கொதுங்கல்
போற்றெரு வோரம் புளியோ வேம்போ
ஆலோ அரசோ அருநிழல் தேடி
ஓலை மறைப்பில் உழலும் வாழ்க்கை
ஒழியுநாள் வருமோ?
முன்னாள் எம்மூர் —
உழுது வித்திய பழனச் செந்நெல்
அலைகடற் படுத்த விளைமீன் குழம்பொடு
ஆர உண்டே, மூரல் முறுவலார்
சேர இருந்து
திங்கள் சொரிந்த
பாலொளிப் பரப்பில்
மாலைத் தென்றல்
முல்லை நறுமணம் முகந்து வீச
மேனி சிலிர்ப்ப இன்பில் மிதந்த
எழில் வாழ்வு கழிந்தது மாதோ!
இந்நாள் —
ஏர்க்களம் யாவும் போர்க்களம் ஆன்
வாரி யிடையே வலைஞர் செல்லார்
குயிலும் கோழியும் கூவல் மறந்தன்
கிள்ளை மழலையும் கேளர் நல்ஆன்
கன்று துள்ளர் கறவை சுரவா
எல்லாம் அழுக்கா றுடையான் உள்ளம்போல்
புலல்லென் றாகிப் போன!
யாமே —
கடுவெயில் அருவழி நெடுந்தொலை ஏகி
கான விறகு கட்டி விற்கும்
அல்லல் வாழ்க்கையேம் ஆனோம்!
இங்ஙன் —
சிறுவர் மகிழார் இளையோர் நயவார்
பாடுநர் நோக்கார் பகையறக் களத்தில்
ஆடுநர் வேண்டார் நீடொளி பரப்பி
மெல்ல வானில் வருகுவை
நல்லை அல்லை நெடுவெண் நிலவே!

பண்டிதர் பரந்தாமன்

# பேரினவாதிகள் சக்தியை முறியடிப்பதற்கு ஒன்றுபடுங்கள்

இலங்கை ஒரு சிங்கள நாடு. இங்கே ஒரு சிங்கள பௌத்த இராச்சியம் உருவாக்கப்பட வேண்டும் என்பது தான் சிங்கள கோசம்மத்தே பூமிபுத்திர கட்சியின் கொள்கையாக முன்வைக்கப்பட்டு வந்தது. இதன் பொருட்டு இக்கட்சி பலகாலமாக பிரசார நடவடிக்கையில் ஈடுபட்டு வந்தது. அதன் தலைவர் சட்டத்தரணி ஹரிஸ்சந்திர விஜேசிங்கவின் வழிநடத்தலில் கடந்த காலத்தில் தேர்தல்களிலும் அக்கட்சி போட்டியிட்டிருந்தது. கடந்த ஜனாதிபதித் தேர்தலிலும் பொதுத்தேர்தலிலும் அக்கட்சி போட்டியிட்டது. மக்கள் என்றும் அக்கட்சியை நிராகரித்து வந்துள்ளது தெரிந்ததே. இதனால் சலிப்படைந்து விட்டவராகிய கட்சித்தலைவர் விஜேசிங்க சிங்கள மக்களுக்கு இனம், மதம் பற்றி அக்கறையில்லை என்பதை தேர்தல் முடிவுகள் மூலம் நிருபித்துள்ளார்கள் என மனம் திறந்து கூறிவைத்துள்ளார். அது மட்டுமல்லாமல் புதிய சிஹல உறுமய கட்சியானது சிங்கள மக்களை அழிப்பதற்கான செயற்பாட்டில் தான் ஈடுபட்டு வரும் எனவும் அண்மையில் விஜேசிங்க கூறிவைத்துள்ளார். பூமி புத்திர கட்சியும் சிகல உறுமயவும் ஒன்றிணைந்து தேர்தலுக்கு முகம் கொடுக்க வேண்டுமென்று மகா சங்கத்தினர் வேண்டியிருந்த போதும் அதனை சிஹல உறுமய நிராகரித்து விட்டமாகவும் அவர் கூறியுள்ளார்.

சிஹல உறுமய கடந்த பொதுத் தேர்தலில் ஒரு தொகுதியிலும் வெற்றியீட்டாமல், தேசிய பட்டியல் மூலம் ஒரு பிரதிநிதித்துவத்தைப் பெற்றது தெரிந்ததே. எனவே தற்போதைய நிலையில் ஒட்டு மொத்தமாகப் பார்க்குமிடத்து சிங்கள பேரின வாதம் மகா சங்கத்திடமும், ஆளும் கட்சிகளுக்குள்ளேயும் அதி தீவிர வலது சக்திகளிடமும் தான் குடிகொண்டிருக்கின்றது எனலாம். எவ்வாறாயினும் இத்தகைய சக்திகளுக்கு ஆண்டாண்டுகாலமாக ஆட்சியாளர் அடிபணிந்து செயற்பட்டதன் ஒட்டு மொத்த விளைவாகவே நாடு இன்று நடுக்கடலில் தத்தளிக்கும் நிலையில் உள்ளது. பேரினவாதிகளின் காட்டுமிராண்டிகள் என்ற உண்மை நிலை பட்டவாத்தனமாகப் பிரதிபலிக்கின்றது. பிந்துனுவெவ புனர்வாழ்வு முகாம் அண்மையில் தாக்கப்பட்டு அங்கிருந்த 29 இளைஞர்கள் மிருகத்தனமாக, சிலர் எரியும் ரயர்களில் வீசியும் கொலை செய்யப்பட்டது இதன் வெளிப்பாடுதான்.

எனவே தான் அனைத்து முற்போக்கு ஜனநாயக சக்திகளும் உடனடியாக ஓரணியில் திரண்டு செயற்பட்டு தமிழ் மக்களை மட்டுமல்ல, எல்லா உழைக்கும் மக்களையும் பாதுகாப்பதற்கு சகல வழிகளிலும் அயராது பாடுபட வேண்டிய காலம் வந்து விட்டது. இன்று உலகமயமாக்கல் எனும் திட்டத்தின் கீழ் குறிப்பாக அமெரிக்கா, மேற்கு ஐரோப்பிய ஏகாதிபத்திய (வடக்கு) நாடுகளின் நலன்காக்கும் வகையில் செயற்பட்டு வரும் உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம், உலக வர்த்தக ஸ்தாபனம் இம்மூன்றும் மூன்றாவது உலக (தெற்கு) நாடுகளை உறிஞ்சிக் கொண்டிருக்கின்றன. தெற்கு நாடுகள் கடன் பழுவில் மூச்சுத்திணறுகின்றன. இதனை மட்டுமே பாரிய பொருளாதாரச் சிதைவு ஏற்படுகிறது. அதற்கெதிராக உழைக்கும் மக்கள் கிளரும் போது ஆட்சியிலுள்ள ஏகாதிபத்திய ஏவல் நாய்கள் மக்கள் போராட்டங்களை முறியடிப்பதற்கு அவசரகாலச் சட்டம், பயங்கரவாதத் தடைச்சட்டம் போன்ற நாசகாரச் சட்டங்களை எல்லாம் கையிலெடுப்பார்கள் என்பதில் எள்ளளவு சந்தேகமும் இல்லை.

எனவே வடக்கு கிழக்கு, மலையக தமிழ் மற்றும் முஸ்லிம் மக்கள் அனைத்து பொதுப் போராட்டங்களிலும் இணைந்து கொண்டால் தான் பேரினவாதிகளையும் அவர்களின் செல்வாக்கையும் முறியடிக்கலாம். பூமி புத்திரக்கட்சி பாயைச் சுருட்டியுள்ளது. நல்லதொரு அறிகுறியும் ஆரம்பமும் ஆகும்.

## ஐக்கிய தேசியக் கட்சிக்கு வாக்குகளை சேகரிப்பது மட்டும்தானா எமது வேலை?

தேசிய தோட்டத் தொழிலாளர் சங்க பொதுச் செயலாளர் கே. வேலாயுதம் ஐக்கிய தேசியக் கட்சியின் உயர் பதவியை இராஜினாமாச் செய்துள்ளார். 1994ம் ஆண்டின் பின்பு கட்சியின் அங்கத்தவர்களுக்கு மாத்திரமே அரசியலில் முக்கிய இடம் கொடுக்கப்படும் என ஐக்கிய தேசியக் கட்சி உறுதி மொழி அளித்திருந்தது. ஆனால் 11வது நாடாளுமன்ற தேர்தலில் மேற்படி உறுதிமொழிகள் யாவும் காற்றில் பறக்க விடப்பட்டுள்ளது. நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் தமக்கு தேசிய பட்டியலில் இடம் கொடுக்கப்படும் என ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் காமினி அத்துக்கொரளை வாக்குறுதி அளித்திருந்தார். தேர்தல் முடிந்ததுடன் அவரிக் வாக்குறுதி வெறும் வார்த்தையாகி உள்ளது என மிகவும் மனம் நொந்த நிலையில் அறிக்கை விட்டுள்ளார்.

வேலாயுதம் தான் விட்ட தவறை வெளிப்படையாக ஒப்புக் கொண்டமை வரவேற்கத்தக்கதாகும். ஆனால் மலையக மக்களின் வாக்குகளை தமக்கு பதவி ஒன்று கிடைக்க வேண்டும் என்பதற்காக தாரை வார்த்துக் கொடுத்த நயவசேக மலையகத் தலைவர்கள் என்ன செய்யப் போகின்றார்கள். 17ஆண்டு காலம் உலகமே காறித்துப்பும் அளவுக்கு மிக மோசமாக ஆட்சி செய்த ஒரு பேரினவாதக் கட்சிக்கு புத்தாயிரம் ஆண்டில் வாக்கு சேகரித்து கொடுத்தவர்களின் பெயர்களைக் கின்னஸ் புத்தகத்தில் பதிய வேண்டும்.

படிப்பகம்

www.padippakam.com

புதிய சமதர்மம்

Registered as a news pa[illegible] in Sri Lanka



வாசகர்களே!
உங்களிடமிருந்து கருத்துக்கள், விமர்சனங்கள்,
ஆலோசனைகள், ஆக்கங்கள் என்வற்றை வரவேற்கிறோம்.
தொடர்புகட்கு
ஆசிரியர்
புதிய சமதர்மம்
143/3, கியு வீதி, கொழும்பு-02
தொலைபேசி: 430621, 305329 தொலைமடல் : 334822

## மலையக மக்களின் எழுச்சி

வரலாற்றில் முல்லோயா தோட்ட போராட்டத்தின் பின் மலையக மக்கள் எழுச்சி கொண்டது. இம்முறை தலவாக்கலையில் நடைபெற்ற போராட்டத்தில்தான். மலையக மக்களின் எழுச்சி முன் நின்று பிடிக்க முடியாமல் ஆயுதப் படையினரே ஓட்டம் பிடித்ததாக செய்திகள் தெரிவிக்கின்றன. உணர்ச்சி மிக்க மலையக மக்களின் போராட்டத்தை மலையகத் தலைவர்கள் காட்டிக் கொடுத்து விட்டனர். பிந்துனுவெவ சம்பவத்தால் மட்டும் மலையக மக்கள் எழுச்சி கொள்ளவில்லை. கடந்த 50 ஆண்டுகாலமாக மலையக மக்கள் மீது பேரினவாதிகள் மேற்கொண்ட அடக்கு முறைகளுக்கு எதிராகவே பொறுத்தது போதும் என மலையக மக்கள் சீற்றம் கொண்டுள்ளனர்.

தற்போது மலையக மக்களுக்குத் தனியான அடையாள அட்டை விநியோகிக்கப்பட இருப்பதாகத் தெரிய வருகிறது. இது இரண்டாவது உலகமகாயுத்தத்தில் யூதர்களுக்கு எதிராக கிட்லர் செய்த கொடூர நடவடிக்கையாகும். இதை பொதுஜன முன்னணியில் இருக்குதம் அமைச்சர் ஆறுமுகம் கண்டித்திருப்பது வரவேற்கத்தக்கதே. அமைச்சர் கண்டிப்பதுடன் பொதுஜன முன்னணியில் இருந்து வெளியேறவும் வேண்டும். ஆறுமுகம் வெளியேறுவாரா?

மலையக மக்களின் எழுச்சி நிலையின் போது இந்த நாட்டின் இடதுசாரி அமைப்புகள் பலமற்று இருப்பது துரதிஷ்டமானதாகும். புதிய இடதுசாரி முன்னணி மட்டுமே மலையக மக்களுக்கு ஆதரவாகக் களத்தில் இறங்கியது. ஜனதா விமுக்தி பெரமுன தற்போது வலது குறைந்த அமைப்பாக மாறி விட்டது. தேர்தலில் எப்படி வெற்றி பெறலாம் என்பமே அதனுடைய அவாவாக உள்ளது.

மலையக எழுச்சியை மலையகத் தலைவர்கள் சரியான முறையில் கையாளவில்லை என்பது தெளிவாகி உள்ளது. இத்தகைய சூழ்நிலையில், இடதுசாரி அமைப்புகள், மீண்டும் மலையகப் பகுதியில் பலம் பெற சந்தர்ப்பம் கிட்டியுள்ளது.

மலையக மக்களின் எழுச்சியை அப்பகுதியில் இராணுவ முகாம்களை நிறுவுவதன் மூலம், அடக்கி விடமுடியாது. எனவே இம்மக்களின் போராட்டங்களை வெற்றி பெறச் செய்வதற்கு சகலரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்.

ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைவதன் மூலம் மலையக மக்களுக்கு, நல்லது, செய்யலாம் என சில மலையகத் தலைவர்கள் மனப்பால் குடிக்கின்றனர். ஐக்கிய தேசியக் கட்சியினதும் ரணில் விக்கிரமசிங்காவினதும், வரலாற்றைச் சரியாக புரிந்து கொண்டவர்கள் இந்தத் தவறை ஒருபோதும் செய்ய மாட்டார்கள். ஆனால் மலையக மக்களின் முன்னேற்றத்தைவிட தமது நிலையினை வளம்படுத்த முயலும் மலையகத்தலைவர்கள் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைவது ஆச்சரியமானதும் அல்ல.

## கண்ணீர்ப் பூக்களை காணிக்கையாக்குகின்றோம்!



நிர்மலராஜனின் படுகொலை, யாழ் மண்ணில் மறக்க முடியாத ஓர் அத்தியாயம் ஆகி விட்டது. உண்மையை எழுதியமையால் இவ் இளம் எழுத்தாளருக்கு கொடுமையான தண்டனை வழங்கப்பட்டுள்ளது. கொலைஞர்கள் நிர்மலராஜனையும், அவரது குடும்பத்தினரையும் இல்லாமல் செய்ய வேண்டும் என்ற மனவைராக்கியத்துடனேயே இந்த பாதகச் செயலைப் புரிந்துள்ளனர். ஏன் நிர்மலராஜன் மீது இவர்கள் இவ்வளவு ஆத்திரம் கொண்டார்கள். தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தை ஆதரித்தமைக்காகவா? வடபகுதியில் நடைபெறும் அனைத்து துயரங்களையும் வெளிக்கொண்டு வந்தமைக்காகவா? யாழ்குடா நாடே யுத்த களமாக இருக்கும் நிலையில் துணிவுடன் செயற்பட்டமைக்காகவா? நல்லது செய்வது இக்கொடியவர்களுக்கு தடையாக உள்ளது போல் தெரிகிறது. ஆட்சியாளர்களுக்கு ஆலவட்டம் பிடிப்பதற்காக, ஜனநாயகத்தின் ஜீவநாடியையே அழிக்க முனைந்துள்ளனர். படுகொலைகள் மூலம் தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தைத் தடுக்க முடியும் என்றால், என்றோ சிங்களப்படை வெற்றி பெற்றிருக்கும். இல்லையெனில் இந்தியப்படையாவது வெற்றி பெற்றிருக்க வேண்டும். இரண்டுமே நடைபெறவில்லை.

“தருமத்தின் வாழ்வுதனில் சூதுகவ்வும் தருமம் மறுபடி வெல்லும்” என பாரதியார் தனது பாட்டில் குறிப்பிட்டுள்ளார். தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தை நசுக்க பல்வேறுபட்ட கொடுமைகள், குள்ளநரி விளையாட்டுகளை பேரினவாதிகள் நிகழ்த்தலாம். ஆனால் வெற்றி தமிழ் மக்களின் விடுதலைக்கு கிடைக்கும் நாள் வெகுதூரத்தில் இல்லை. அந்நாளில் சூழ்ச்சிகள், சதிகள் பற்றிய பல செய்திகள் அம்பலத்துக்கு வரும்.

நிர்மலராஜன், குமார் பொன்னம்பலம் போன்றவர்களின் மரணத்தைப் படுகொலைக்குப் பொறுப்பானவர்களின் விவரமும் அப்போது நிச்சயம் அம்பலத்துக்கு வரும்.

## பாலியல் வல்லுறவுகளிலும் அரசியல் செல்வாக்கு

தமது சினேகிதியின் வீட்டுக்கு விருந்துண்ண சென்ற இரண்டு பெண்கள் தமது தங்க நகைகளைப்பறி கொடுத்தனர். பின்பு கடத்தப்பட்டனர். இறுதியில் பாலியல் வல்லுறவுக்கும் உள்ளாக்கப்பட்டனர்.

கிறாண்ட்பாஸ் பகுதியில் இருந்து வத்தளைப் பகுதிக்குச் சென்ற இரண்டு அப்பாவி இளம் பெண்களுக்கே இந்த துயரம் ஏற்பட்டுள்ளது. குற்றத்தைச் செய்த பாதாள உலக தலைவரும் அவரது சகாக்களும், உயர் அரசியல் செல்வாக்குக் காரணமாக வெளியே வரவுள்ளனர்.

வத்தளைப் பொலிஸ் நிலையத்துக்குச் சென்ற பாதிக்கப்பட்ட பெண்கள் கொள்ளையிட்டமை, ஆட்களைக் கடத்தியமை, பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கியமை ஆகிய குற்றச் சாட்டுக்களை எதிரிகள் மீது சுமத்தி முறைப்பாடு செய்திருந்தனர். எதிரிகள் உடனடியாக கைதும் செய்யப்பட்டனர். எதிரிகளின் தலைவன் ஏற்கனவே ஒரு கொலைக் குற்றத்துடன் தொடர்புபட்டவர் ஆவார்.

இப்பெண்களை கடத்தியவர்கள் அவர்களது நகைகளை கொள்ளை அடித்ததுடன், குனுபிட்டிய பகுதியில் உள்ள பாழ் அடைந்த புகையிரத களஞ்சிய அறைக்கு கொண்டு சென்று பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கி உள்ளனர். முதல் குழுவினரின் துயரத்தால் வேதனையுடன் இருந்த இவ் அப்பாவிப் பெண்களை மேலும் ஆறுபேர் தொடர்ந்தும் பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கி உள்ளனர்.

பாதிக்கப்பட்ட பெண்களில் ஒருவர் 2 பிள்ளைகளுக்குத் தாயார். மற்றவர் 3 பிள்ளைகளுக்குத் தாயார். பாதிக்கப்பட்டவர்களுக்கு விடுவிக்கப்பட்ட கொலைப் பயமுறுத்தல்களுக்கு பயந்து முறைப்பாடு மீளப் பெறப்பட்டதாகத் தெரிய வருகிறது. தமிழர்களுக்கு ஏதும் சலுகைகள் கொடுக்க முற்பட்டால் கூட மணந்து பிடித்து போராட்டம் செய்யும் சிங்களப் பேரினவாத அமைப்புகள் இவை பற்றி அதிகம் அலட்டிக் கொள்வதில்லை. இத்தகைய சம்பவங்கள் அவர்களுக்கு பெரிதாகத் தெரிவதில்லை. பௌத்தமதம் அரசமதமாக இருக்கும் நாட்டில் எத்தகைய தர்மம் கடைப்பிடிக்கப்படுகிறது.

## களஞ்சிய சாலைகளில் தேங்கிக் கிடந்த உணவு வகைகள் பழுதாகின

அண்மையில் கூட்டுறவு மொத்த விற்பனை நிலைய களஞ்சிய சாலையில் பல வருட காலமாக தேக்கி வைக்கப்பட்ட உணவு வகைகள் பழுது அடைந்து இருந்தது தொலைக்காட்சி மூலம் காட்டப்பட்டது. ஏழை மக்கள் நாளாந்தம் உண்ணும் கருவாடு, பருப்பு, வெங்காயம் போன்றவையே இங்ஙனம் பழுதடைமந்து காணப்பட்டன. பிரதான களஞ்சியசாலையை உயர் அதிகாரிகள் பரிசீலிக்காததாலேயே இத்தகைய நிலை கண்டறியப்பட்டதாகக் கூறப்படுகிறது. முன்னைய வர்த்தகத்துறை அமைச்சர் மற்றவர்களுக்கு புத்தி சொல்வதில் வல்லவராக விளங்கினர். இலங்கை மக்கள் அதிகம் உண்கின்றார்கள் என்றும் ஒரு வைபவத்தில் குறிப்பிட்டிருந்தார். மக்கள் அதிகம் உண்ணாமல் இருக்க, பொருட்களைக் களஞ்சியத்தில் அமைச்சர் தேக்கி வைத்திருந்தாரோ தெரியவில்லை. ஒருவேளை உணவுக்காக நாளாந்தம் அங்கலாய்க்கும் மக்கள் இருக்கும் நாட்டிலே பெருந்தொகையான உணவு பழுதடைந்து அவற்றை நிலத்துக்குள் புதைப்பது எவ்வளவு கொடுமையானது ஆகும்.

அமைச்சர் கிங்சிலி விக்கிரமரத்ன இம்முறை பாராளுமன்றத்துக்கு தெரிவாகவில்லை. மக்கள் அவருக்கு சரியான பாடத்தையே படிப்பித்துள்ளனர். ஏனைய அமைச்சர்களின் களஞ்சிய சாலைகளிலும் என்ன தேங்கிக் கிடக்கிறதோ யாருக்குத் தெரியும். நீதி அமைச்சர் பட்டி வீரக்கோனின் அமைச்சின் கீழ் வரும் சிறைச்சாலைகளில் ஏராளமான தமிழ் இளைஞர்கள் விசாரணை இன்றி தடுத்து வைக்கப்பட்டு இருப்பது உலகத்துக்குத் தெரியும்.

## மாரி காலம் வன்னி மக்களை வதைக்கிறது

அண்மைக்காலமாக பெய்து வரும் கடும் மழையினால், வன்னி மக்கள் பெரும் கஷ்டங்களுக்கு ஆளாகி வருவதாகத் தெரிகிறது. இடம் பெயர்ந்து வாழும் மக்களே பெரும் அவலங்களுக்கு உள்ளாகி இருப்பதாக அறிய முடிகிறது. கிளிநொச்சியில் தொடர்ந்து பெய்து வரும் கடும் மழையினால், இடம் பெயர்ந்த 3000க்கும் மேற்பட்ட குடும்பங்கள் பெரும் அவலத்துக்கு உள்ளாகி உள்ளதாகத் தெரிகிறது.

மழை வெள்ளம் இம்மக்கள் வாழும் சிறு குடிசைகளுக்குள் தேங்கி நிற்பதால் மக்களினால், எத்தகைய வேலைகளையும் செய்ய முடியாத நிலையில் பட்டினியுடன் கிடக்கும் நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

உதவி வழங்கும் நிறுவனங்களும் தம்மால் ஒன்றும் செய்ய முடியாது என கை விரித்துள்ளன. ஒரே ஒரு நிறுவனம் மாத்திரம் குடிசைகளைத் திருத்தி அமைக்க நிதி உதவி வழங்க உடன்பட்டிருப்பதாக அறிய முடிகிறது.

கிளிநொச்சியில் 48 இடம்பெயர்ந்தோர் குடியிருப்புகள் உள்ளன. இவற்றில் 699 குடும்பங்கள் உள்ளன. இங்கு 24 ஆயிரத்து 768 பேர் வாழ்கின்றனர்.

இதைவிட கனரச்சியில் 16 குடியிருப்புக்களிலும் கண்டாவளையில் 7 குடியிருப்புகளிலும் பூநகரியில் 23 குடியிருப்புக்கள் உள்ளதாகத் தெரிய வருகிறது. இவைகளும் மழையினால் பெரும் அனர்த்தங்களுக்கு உள்ளாகி இருப்பதாகச் செய்திகள் கூறுகின்றன.

படிப்பகம்